வார இதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT
No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

இதழ்: 08 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி மாதம் 06.10.2023 - 12.10.2023 | பக்கங்கள்: 12 | விலை: 80/=



நீதிபதி விவகாரம்;

# தமிழர் தாயகத்தில் தீவிரமடையும் போராட்டங்கள்

## பௌத்த பேரினவாதிகளுக்கு நெருக்கடிகளை கொடுக்க முடியாமல் திண்டாடும் தமிழ் தலைமைகளின் இராஜதந்திரமற்ற முடிவுகள்



(தேசியம் நிருபர்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகி வெளிநாட்டிற்கு சென்றுள்ள முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையிலும் குறித்த விவகாரம் தொடர்பில் ஒரு நீதியான விசாரணையை கோரியும் சர்வதேச சமூகம் இவ்விடயத்தில் அவதானம்

பக்கம் 10

நீதிபதி சரவணராஜா விவகாரம்

# சி.ஐ.டி.யிடம் ஒப்படைப்பு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் நீதவானுமான டி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு (CID) பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் உத்தரவிட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய குருந்திமலை விகாரை வழக்கை விசாரித்த சரவணராஜா, செப்டம்பர் 23 அன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்தில், மாவட்ட நீதிபதி,

பக்கம் 10



# கிளிநொச்சியில் 3000 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

பக்கம் 10

நீதிபதி விவகாரம்

# முழுமையான கரிசனை கொள்ளப்படும்

நீதிபதி சரவணராஜா மீதான அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக உண்மைகளை கண்டறிவது தொடர்பில் முழுமையான கரிசனை கொள்ளப்படும் என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌவல்ய நவரத்ன

பக்கம் 10




# சனல் 4 ஊடகத்தினை ஏன் புனிதமாக கருதுகின்றீர்கள்?

## சீற்றமடைந்த ரணில்

பக்கம் 10



# பேரினவாதத்துக்கு அடிபணியாத 'நீதி'

▶ செல்வி வினாயகமூர்த்தி

**குருந்தூர்மலை** விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை எதிர்கொண்டு உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதி பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா நாட்டைவிட்டு அண்மையில் வெளியேறிய செய்தி ஆட்சி அதிகாரத்திலுள்ள பெரும்பான்மை அரசியல் தரப்பிலும் இலங்கை நீதித்துறையிலும் தமிழ் தேசியப்பரப்பிலும் புலத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

முல்லைதீவு மாவட்ட நீதவான் ரி சரவணராஜா கடந்த 23ம் திகதி தன் உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக மாவட்ட நீதிபதி, நீதவான்,குடும்ப நீதிமன்ற நீதிபதி,ஆரம்ப நீதிமன்ற நீதிபதி ,சிறு தொகைக் கோரிக்கைகளுக்கான நீதிமன்ற நீதிபதி ,இளம்வயதினருக்கான நீதிமன்ற நீதிபதி ஆகிய பதவிகளில் இருந்த தாம் விலகுவதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு பதிவுத்தபால் மூலம் கடிதம் அனுப்பிவிட்டு நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

குருந்தூர்மலை விவகாரத்தில் பேரினவாதத்தின் அழுத்தங்கள் ,அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு அடிபணியாது நீதித்துறையின் பணியை அவர் செவ்வனே ஆற்றியிருந்தார். இதனைத்தொடர்ந்தே நீதிபதிக்கு தொடர் அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.சுயாதீனமாக செயற்பட வேண்டிய நீதித்துறையை ஆட்டங்காணச்செய்த அச்சுறுத்தல்வாதிகளை ஜனநாயகத்துக்கும் நீதித்துறை சுதந்திரத்துக்கு எதிரானவர்களாகவே தற்போது நடந்தேறியுள்ள சம்பவத்தின் பிரகாரம் நோக்கவேண்டியுள்ளது.

இலங்கையின் நீதித்துறையானது எந்தளவு சுயாதீன தன்மையற்ற வகையில் இயங்கி வருகிறது என்பதற்கு முல்லைத்தீவு நீதவான் ரி .சரவணராஜாவின் பதவி துறப்பும் நாட்டை விட்டு வெளியேற்றமும் ஓர் சான்று.

ஆனாலும் இலங்கையை பொறுத்தவரையில் நீதிபதிகள் பதவி விலகுதல் என்பது சிங்கள தேசத்தின் நீதித்துறைக்கு ஒன்றும் புதிதல்ல.துணிச்சலாகவும் நேர்மையாகவும் இருந்த பிரத நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவையும் வலோத்காரமாக பதவி துறக்க வைத்து ஓட ஓட விரட்டியதும் இந்த சிங்கள தேசத்தில்தான் .ஒரு பிரதம நீதியரசராக இருந்த சிங்கள பெண் நீதியரசருக்கு இந்நிலை எனில் தமிழ் நீதிபதி யொருவரின் நிலை எவ்வாறு இருக்கும் என நாம் ஐயப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இருக்கப்போவதில்லை.

> அரசாங்கத்தினது போர்குற்றங்கள் இனப் படுகொலைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மனித புதைகுழி விவகாரம், பௌத்த மயமாக்கல், நில, பண்பாடு ஆக்கிரமிப்பு போன்ற இன்னோரன்ன காரணிகளை பேரினவாத அரசு சட்ட முறைமைகளுக்கு அப்பாற்பட்டு தற்றுணிவின் அடிப்படையில் தன் இனம் சார்ந்து கையாள நிர்பந்திக்கப்பட்டதன் விளைவே நீதிபதி ரி.சரவணராஜா தமது நீதவான் பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறிய சம்பவமாகும்.

பொதுவாக நீதித்துறையின் சுதந்திரத்தை மதிப்பதும் கண்காணிப்பதும் ஓர் நாட்டின் அரசாங்கத்தினதும் ஏனைய ஸ்தாபனங்களினதும் மிக பிரதான கடமையாகும்.

அதிலும் நீதித்துறை செயற்பாடுகளின் தேவையற்ற பொருத்தமற்ற தலையீடுகள் இல்லாதிருப்பதுடன் நீதித்துறையின் தீர்மானங்களை அச்சுறுத்தல்வாதிகளால் மாற்ற முடியாதளவிற்கு சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஆனால் அண்மைக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் நிறைவேற்று அதிகாரம் மிக்கவர் வரை நீதிபதிகளையும், நீதி மன்றங்களினால் வழங்கும் தீர்ப்புகளையும் விமர்சனம் செய்வது சர்வ சாதாரணமாகி விட்ட ஒரு விடயமாகவே கருதமுடியும் .

இலங்கையின் நீதித்துறை பேரினவாதத்தின் கொடூரத்துக்குள் சோரம் போயுள்ள நிலையில் தமிழர்களுக்கு நியாயமான நீதி நிறைந்த எதிர்காலம் இல்லை என்பதை சர்வதேசம் தெளிவாக உணரும் நேரமிதுவாகும்.ஏனெனில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 14 வருடங்களுக்கு பின்னரும் நாட்டிலிருந்து புகழிட தஞ்சம் கோரி ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்லும் ஏதிலிகளிடம் அந்த நாடுகள் ஒரு இறுக்கமான நிலையை கையாண்டு புகலிட கோரிக்கைகள் மறுக்கப்பட்டு வாழத் தகுதியுள்ள நாடாக இலங்கைக்கு திருப்பி அனுப்புகின்றனர்.




அவ்வாறானதொரு நிலையில் தமிழர் நீதிபதி சரவணராஜாவின் நாட்டை விட்டான வெளியேற்றமானது இந்த நாடு ஏனைய இனங்கள் வாழ பாதுகாப்பில்லாத நாடாகவே வேறோர் கோணத்தில் சர்வதேசத்தை அவதானிக்க வைக்கிறது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனப்படுகொலைகளும் ஓரவஞ்சக போக்கும் இலங்கைதீவு முழுதும் வாழும் தேசிய இனத்தின் மீதான ஜனநாயக நீதித்துறை உரிமைகளை பறித்தே வந்துள்ளது .பேரினவாத அரசின் பலம் கூடும் காலங்களிளெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிருவாக துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறையை மாற்றிவருகின்றது.அரசு தாம் விரும்பியபடி தீர்ப்புகளை பெறவும் மாற்றியமைக்கவும் ஆணைகளை வழங்கவும் அரசியல் அதிகாரத்தை காபந்து செய்யவும் தமக்கேற்ற வகையில் இன்று நீதித்துறையை ஒழுங்கு செய்துள்ளது .

விசேடமாக அரசாங்கத்தினது போர்குற்றங்கள் இனப் படுகொலைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மனித புதைகுழி விவகாரம் ,பௌத்த மயமாக்கல்,நில,பண்பாடு ஆக்கிரமிப்பு போன்ற இன்னோரன்ன காரணிகளை பேரினவாத அரசு சட்ட முறைமைகளுக்கு அப்பாற்பட்டு தற்றுணிவின் அடிப்படையில் தன் இனம் சார்ந்து கையாள நிர்பந்திக்கப்பட்டதன் விளைவே நீதிபதி ரி . சரவணராஜா தமது நீதவான் பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறிய சம்பவமாகும். ○

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com




# தமிழர் தேசம் கிளர்ந்தெழவேண்டும்

**இந்த** நாட்டில் தமிழனாக பிறந்த எவரொருவரும் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவர் சிங்கள –பௌத்த பேரினவாதத்தின் கீழ் அடிபணிந்து தான் செல்ல வேண்டுமென்பதற்கு சிறந்த ஒரு உதாரணம் கடந்த வாரம் நீதிபதி பதவியை இராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியிருக்கும் முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜாவின் விவகாரம்.ஒரு நீதிபதிக்கே இந்த நிலமையென்றால் இந்த தமிழர் தேசத்தில் வாழ்கின்ற சாதாரண மக்களுடைய நிலைமை என்னவாக இருக்கும் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் இருந்துவிட முடியாது. முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் ஏற்பட்டதாகவும் இதன் காரணமாக தாம் பதவி விலகுவதாகவும் தெரிவித்து நீதிபதி ரீ.சரவணராஜா கடந்த 23 ஆம் திகதி நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு தமது பதவி விலகல் கடிதத்தை அனுப்பியிருந்ததுடன்,அதனை தொடர்ந்து அவர் இலங்கையை விட்டு வெளியேறியிருந்தார்.இந்த விவகாரம் தற்சமயம் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் பேசு பொருளாக மாறியிருக்கிறது.

குறிப்பாக நீதிபதிக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அவருடைய பதவி விலகலுக்கு எதிராக தமிழர் தாயகத்தில் ஆர்ப்பாட்டங்களும் கண்டன போராட்டங்களும் [வழமையான போராட்டம்] நடைபெற்று வருகின்றன. ஆனால்,சிங்கள தேசத்தில் இந்த விவகாரம் தொடர்பில் எந்தவொரு எதிர்ப்புகளும் இதுவரை வெளிவரவில்லை. இதுவும் வளமையானதொன்றே.இத்தனை இலட்சம் தமிழர்களை முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்த சம்பவத்தையே பட்டாசு வெடித்து–பாற்சோறு வழங்கி கொண்டாடிய ஒரு சமூகத்திடமிருந்து இதனை எதிர்பார்ப்பது என்பது வேடிக்கையானதொன்றுதான். ஆனாலும்,இன்று இந்த அச்சுறுத்தலுக்கு சொந்தக்காரர்களாக தமிழர்கள் இருந்தாலும் இதனை ஒட்டுமொத்த நாடும் எதிர்க்காமல் இருக்குமாகவிருந்தால் நாளை இந்த நிகழ்வு நிச்சயமாக சிங்கள தேசத்தை நோக்கி நடப்பதற்கும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

இந்த நிலையில்,நீதிபதி சரவணராஜாவுக்கு ஏற்பட்ட நிலைமையை கண்டித்து தமிழர் தாயகத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.ஆனால்,இந்த போராட்டங்கள் ஒரு சாதாரண விடயத்துக்காக முன்னெடுக்கப்படும் போராடங்களாகவே இருக்கின்றன.வெறும் நூறுக்கும் குறைவானவர்கள் பங்கெடுக்கும் ஒரு போராட்டமாக இருக்கிறது.இவ்வாறான போராட்டங்களால் தென்னிலங்கையையோ சர்வதேசத்தையோ அசைத்து பார்க்க முடியும் என்று எவராவது நம்பினால் அதைவிட முட்டாள்தனமான முடிவு இருக்க முடியாது.தமிழ் மக்களுக்காக போராடக்கூடிய,தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள–பௌத்த மேலாதிக்கவாதிகளால் முன்னெடுக்கப்படும் அச்சுறுத்தல்கள்,அடாவடிகளை தட்டி கேட்பதற்கு மிக சொற்பமானவர்களே தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். அதில் ஒருவர் தான் நீதிபதி சரவணராஜாவும். ஆகவே இன்று நீதிபதிக்கு ஏற்பட்ட நிலைமை நாளை தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் ஏனையவர்களுக்கு ஏற்படலாம்.அந்த சொற்பமானவர்களும் நாட்டை விட்டு வெளியேறலாம்.ஆகவே இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுமாகவிருந்தால் தமிழர் தேசம் திரண்டு எழ வேண்டும்.தமிழர்களுடைய எழுச்சி என்பது சிங்கள இனவாதிகளுக்கு ஒரு வலுவான –தெளிவான செய்தியை கொடுப்பதாகவும் சர்வதேச சமூகத்துக்கு ஒரு தெளிவை ஏற்படுத்துவதாகவும் அமைவது அவசியமாகும்.யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்களான போதும் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர தீர்வையோ அல்லது தமிழர் தேசத்தில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு ஒரு நீதியையோ வழங்காது தமிழர்களை ஏமாற்றிவரும் சர்வதேச சமூகமும் இந்தியாவும் விழிப்படையும் வகையில் இந்த எழுச்சி இருக்க வேண்டும்.அதைவிடுத்து கட்சிக்காரர்களும் கட்சிகளின் ஆதரவாளர்களும் கலந்துகொள்ளும் ஒரு போராட்டமாக இந்த போராட்டங்கள் இருக்கக்கூடாது.இது மக்களுடைய போராட்டமாக–இது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அச்சுறுத்தலாக–தமிழர் தேசத்துக்கு இழைக்கப்பட்ட அச்சுறுத்தலாக கருதி ஒட்டுமொத்த தமிழர் தேசமும் தங்களுடைய வரலாற்று கடமையாக கருதி கிளர்ந்தெழுவது அவசியமாகும்.இந்த எழுச்சி சர்வதேச சமூகம் தமிழர் தேசத்தை திரும்பி பார்க்கும் வகையில் அமைய வேண்டும்.சிங்கள தேசம் தமிழருக்கு இழைத்த –இழைத்துக்கொண்டிருக்கும் அநீதிகளை சர்வதேசம் தட்டிக் கேட்பதாக தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படவிருக்கும் போராட்டங்கள் அமையவேண்டும்.அதற்கு தமிழ் தலைமைகளிடம் இராஜதந்திர

# ஐரிஷ் பொபி சான்ட்ஸின் உண்ணா விரத போராட்டம்! அகிம்சையின் உச்சந் தொட்ட தியாக தீபம் திலீபன்!



**வட** அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.

### ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்:

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர். அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு

எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்!

பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாக பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாட்களில் முடிவுக்கு வந்தது, ஆம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம்திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.

ரொபேர்ட் ஜெரார்ட் சான்ட்ஸ் (Robert Gerard Sands, 'பொபி சான்ட்ஸ்' (Bobby Sands, மார்ச் 9, 1954 - மே 5, 1981), ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த போராளியும், ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். 1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ். ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணாநோன்பை ஆரம்பித்தனர். இவர் உண்ணாநோன்பிருந்த காலத்தில்

நவீனன்

சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழரின் உரிமைகளுக்காக திலீபன்:

அன்று ஐரிஷ் மக்களின் எழுச்சிக்கு அகிம்சை ரீதியில் குரல் கொடுத்தது போல, தமிழரின் உரிமைகளுக்காக,

மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்,

சிறைச் சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப்பெறப்பட வேண்டும், தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக காவல் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட வேண்டும், என்ற ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்டம்பர் 15ம் திகதி நல்லைக் கந்தனின் முன்றலில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஈழத்தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை அங்கீகரிக்க மறுத்தது இந்திய இலங்கை ஒப்பந்தம். தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை, தமிழர் நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை மிக வேகமாக தொடர்வதற்கு வழி வகுத்தமையால்,

மகாத்மா காந்தி இவ்வுலகிற்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையைக் கையில் எடுத்து, அகிம்சையின் அடையாளமாக உலகிற்கு முன் நிமிர்ந்தார் தியாக தீபம் திலீபன்.

### ஜரீஸின் திலீபன் பொபி சான்ட்ஸ்

தங்களை அரசியல் கைதிகளாக நடத்தவேண்டும் ,சிறையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை நிறுத்தவேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து பொபிசான்ட்ஸ் அவரது தோழர்கள்

உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே ஐரீஸ் குடியரசு இயக்கம் (Irish Republican Movement ) சார்பில் நின்று தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

பொபி சான்ட்ஸ், அயர்லாந்தை ஆக்கிரமித்து வைத்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த ஒரு ஐரிஸ் சாதாரண போராளி. பிரித்தானியர்களின் அதிகாரத்திற்கு எதிராக அரசியல்ரீதியாகவும், ஆயுதரீதியாகவும் போராடிக்கொண்டிருந்த ஐரிஸ் குடியரசு இராணுவத்தில் (IRA) தன்னை இணைத்துக் கொண்ட போது அவருக்கு வயது 18.

ஐரிஷ் விடுதலை இயக்கத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்தவுடனேயே ஏகாதிபத்திய அரசு சிறைப்படுத்தியது.சட்ட விரோதமாக துப்பாக்கி பயன்படுத்தியது,பெருவாரியான ஆயுதங்களை பதுக்கிவைத்தது, வெடிகுண்டு வழக்கு என தொடர்ச்சியாக சிறையிலடைத்தது.

சிறையில் அரசியல் கைதிகள் குற்றவாளிகளை போல நடத்தப்பட்டனர், அவர்களது தார்மீக உரிமைகள் மறுக்கப்பட்டது. மனித உரிமை மீறால்களுக்கும் தொடர்ச்சியாக ஆளாக்கப்பட்டனர்.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொபிசான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம்மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொபிசான்ட்ஸின் மரணம் விடுதலைக்காக உலகமெங்கும் போராடி வரும் போராளிகளின் மனநிலையை பிரதிபலிக்கும். எங்கள் மீதான பழிவாங்கல் எங்கள் குழந்தைகளின் சிரிப்பாக இருக்கும் என்ற அவரின் இறுதி வரிகள், அயர்லாந்து மக்கள் அனைவருக்கும் ஒரு நாள் விடிவு வரும் அப்போது தங்களுக்கு விருப்பமான சுதந்திரத்தை காண்பார்கள், எழுந்து வரும் சந்திரனை போல என்பதற்கு கட்டியம் கூறியது.

### விண்ணிலிருந்து விடுதலையை பார்ப்பேன்!

மரணத்தின் தறுவாயில், விண்ணிலிருந்து பார்ப்பேன் விடுதலையை என்ற தியாக தீபம் திலீபனின் வார்த்தைகள் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை உத்வேகப்படுத்தியது.

கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். மருத்துவப் பரிசோதனை செய்யக்கூடாது. நான் உணர்வு இழந்தபிறகும் வாயில் தண்ணீர் ஊற்றக்கூடாது. இறக்கும் வரை எந்த விதமான சிகிச்சையும் அளிக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தி பன்னிரு நாட்களுக்கு நீராகாரம் இன்றி தனது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நான் இறப்பது நிச்சயம். அப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து நமது இலட்சியத்துக்காக உழைப்பேன் என்று கூறிய தியாக தீபம் திலீபன் அணைந்து பல ஆண்டுகள் கடந்து விட்டாலும் அவர் விட்டுச் சென்ற விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டு தான் இருக்கிறது. 1987ம் ஆண்டில் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் தற்போது தாயகத்தில் இடம்பெறுகிற அரசியல் சூழ்நிலையிலும் அவசியமான மற்றும் முக்கியமான கோரிக்கைகளாக உள்ளன.

வடகிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியான நில அபகரிப்பும் மற்றும் இராணுவமையமாக்குதலும் இன்று வரை இடம் பெற்று கொண்டு வருகிறது. அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வழக்கு இன்றி அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள். திலீபனின் போராட்டத்தின் முக்கிய காரணிகள் இன்றும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

திலீபனின் போராட்டம் வரலாறு மட்டும் அல்ல, இன்று நடைபெறுகின்ற தாயக நிலவரத்தில் அவசிய தேவையாகவும் அமைகின்றது. தமிழ் மக்களுக்காக போராடிய திலீபனின் விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டு தான் இருக்கிறது.

**தமிழ்மக்களின்** பூர்வீகப் பிரதேசமான முல்லைத்தீவு குருந்தூர்மலை தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொண்டு நீதியான தீர்ப்புக்களை வழங்கி வந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு குறித்த தீர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர் அழுத்தங்கள் விடுக்கப்பட்டமையின் காரணமாக கடந்த வாரம் நீதிபதிப் பதவியிலிருந்து விலகியுள்ளதுடன் நாட்டிலிருந்தும் வெளியேறியுள்ளார்.

இந்தச் சம்பவம் சிறீலங்கா நீதித் துறையின் சுயாதீனத் தன்மை தொடர்பில் பலத்த சந்தேகங்களையும், பேரதிர்வினையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் கடும் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

இந்நிலையில் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் தேசியம் வாராந்தப் பத்திரிகைக்கு சிவில்- சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் பகிர்ந்து கொண்ட கண்டணக் கருத்துக்களை அப்படியே உங்களுக்காகத் தருகின்றோம்.



# இலங்கையில் நீதிபதிக்கே இந்த நிலை என்றால்?

## சாதாரண தமிழ் மக்களின் நிலை என்ன?

### கண்டனக் கருத்துப் பகிர்வுகள்

**மு.ஈழத்தமிழ்மணி:**
**மூத்த எழுத்தாளரும், அரசியல் விமர்சகரும்**



இலங்கையின் நீதித்துறை என்பது தமிழ்மக்களுக்கு ஒருவிதமான நீதியும், பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு இன்னொரு வகையிலுமே சிங்கள அரசினால் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலிலிருந்து நாங்கள் புரிந்தும், தெரிந்துக் கொள்ளக் கூடியதாகவிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்மக்களின் பூர்வீகப் பிரதேசமான குருந்தூர் மலையில் சிங்களப் பௌத்த பிக்குகள் சேர்ந்து சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரைக் கட்டுமானத்தை கட்டியெழுப்பிய போது இதனை எதிர்த்துத் தமிழ்த் தரப்புக்கள் போராட்டங்களை நடாத்தியிருந்தன. இதன் விளைவாக குருந்தூர்ம லையில் விகாரை அமைக்கப்பட்ட விடயம் பூதாகரமானதொரு பிரச்சினையாக மாறியிருந்தது.

தமிழர் தரப்பால் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிற்கமைய இதுதொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு மாவட்டா நீதிபதி சரவணராஜா ஒரு குழுவாக, நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார். அப்போது முன்னர் இராணுவ அதிகாரியாகவும், தற்போது நாடாளுன்ற உறுப்பினராகவும் உள்ள சரத் வீரசேகர தலைமையிலான குழு நீதிபதிக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன், நீதித்துறை சம்பந்தமான விவாகரத்தை அசிங்கப்படுத்தும் வகையிலும் செயற்பட்டிருந்தார்.

இதன்பின்னர் நீதிபதி சரவணராஜாவுக்குப் பல கோணங்களிலும் உயிர் அச்சுறுத்தல்களும், அழுத்தங்களும் ஏற்படுத்தப்பட்டமையை அவரது பதவி விலகலின் பின்னர் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மூலம் எம்மால் தெரிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. இந்தச் சம்பவம் தமிழ்மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியையும், வேதனையையும் உண்டாக்கியுள்ளது. இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும்.

எனவே, இலங்கையில் சிங்கள அரசு தமிழ் மக்களுக்குச் செய்கின்ற கொடுமைகள், நீதித்துறையை அவமதிக்கும் செயற்பாடுகளைச் சர்வதேச நீதித்துறை அப்பழுக்கற்ற முறையில் கண்டறிந்து சரியான நீதியை நிலைநாட்ட வேண்டும். நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகளுக்கு காரணமானவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட்டுத் தமிழ்மக்கள் நாட்டில் அச்சமின்றி வாழ உரிய வழி ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார்.

**என்.இன்பம்:**
**கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர்**



தமிழ்மக்கள் பாரிய ஜனநாயக அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில் நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் எம்மனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ்மக்கள் தங்கள் அடிப்படை அரசியலுக்காகப் போராடி வந்ததொரு சூழ்நிலையில் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தங்கள் உறவுகளுக்காகத் தொடர்ச்சியாகப் போராடி வரும் நிலையில் இதுவரை எந்தவொரு நீதியும் வழங்கப்படவில்லை.

தமிழ்மக்கள் யுத்தத்திற்குப் பின்னர் இழந்த தமது பூர்வீகமான நிலங்களை மீட்பதற்காகப் போராடி வரும் நிலையில் அரசாங்கத்தின் தொல்பொருட் திணைக்களம் மூலம் நிலங்களைக் கபளீகரம் செய்யும் செயற்பாடும், அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ்மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் விகாரைகள் அமைக்கும் செயற்பாடும் தொடர்ந்து வருகிறது. இவ்வாறானதொரு நிலையில் தமிழ்மக்களின் பாரம்பரியமான குருந்தூர் மலை தொடர்பில் நீதிபதி சரவணராஜா மிகவும் காத்திரமான பங்களிப்பை நேர்மையான முறையில் வழங்கியிருக்கின்றார். அவருடைய நேர்மைத் தன்மை தமிழ்மக்களுக்குச் சாதகமாகவிருந்த ஒரேயொரு காரணத்துக்காக பாரிய அச்சுறுத்தல்களையும், அழுத்தங்களையும் வழங்கிச் சிங்கள-பௌத்த பேரினவாத சக்திகள் நீதவான் சரவணராஜாவைப் பதவி விலகச் செய்திருக்கிறார்கள்.

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் சிங்கள- பௌத்த பேரினவாத ஆட்சியில் தமிழ்மக்கள் எந்தவொரு நீதிப் பொறிமுறைக்கு ஊடாகவும் உரிமைகளைப் பெற முடியாது என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளது. இந்தச் சம்பவத்தின் பின்னரும் தமிழ்மக்கள் உள்ளக நீதிப் பொறிமுறை தொடர்பில் தமிழ்மக்கள் தரப்பில் யாராவது கருத்துக்களைக் கூறுவார்களேயானால் அவர்கள் மிக மிக வடிகட்டிய முட்டாள்களாகத் தானிருப்பர். சர்வதேச நீதிப் பொறிமுறையே தமிழ்மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான ஒரே வழி.

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலைக் கண்டித்துத் தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள கட்சிகள், தலைவர்கள் சில போராட்டங்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளனர். இந்த அறைகூவலை ஒரு வகையில் நான் ஏற்றுக் கொண்டாலும் கூட இவ்வாறான போராட்ட வழிமுறை பாதிக்கப்பட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு ஒரு நியாயதைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் அமையுமா? என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கின்றது. எனவே, தனியே போராட்டங்களுடன் மாத்திரம் நின்றுவிடாது அதற்கு வலிமை சேர்க்கும் வகையில் தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்க முன்வர வேண்டும் என்றார்.

**நடராசா உமாகரன்:**
**தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்**



அரசினால் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக நீதிபதி சரவணராஜா தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். முல்லைத்தீவு குருந்தூர் மலை சம்பந்தமாக ஜனநாயகத்தையும், நீதியையும் நடைமுறைப்படுத்த முடியாததொரு சூழலில் தான் உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் தனது பதவியைத் துறக்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் சர்வதேசமும், புலம்பெயர் தமிழர்களும் பெரும் கவனமெடுத்து ஐக்கியநாடுகள் சபையின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் ஒரு நீதிபதிக்கே இந்த நிலை என்றால் தமிழ்மக்களின் நிலைமை எவ்வாறிருக்கும்? என்பதைச் சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

**நகுலேஸ்வரன் விஜயதரன்:**
**உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் தலைவர்**



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகியுள்ளமையானது இலங்கையில் சுயாதீனமாகச் செயற்படக் கூடிய நீதித்துறைக்கு ஏற்பட்டிருக்கின்றதொரு மிக மோசமான அடி என்று தான் சொல்ல வேண்டும். தமிழ்மக்கள் யுத்தம் ஓய்வடைந்த பின்னரும் சிங்களப் பேரினவாத ஆதிக்கத்தின் கீழ் இருப்பதையே இந்தச் சம்பவம் உணர்த்துகின்றது. இலங்கை சர்வதேசத்தின் மத்தியில் வெட்கித் தலைகுனிய வேண்டியதொரு சம்பவமாக இந்தச் சம்பவம் காணப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர போன்றவர்களின் மோசமான செயற்பாடுகள் தான் இலங்கை நீதித்துறையை இவ்வாறான மோசமான நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது.

சுயாதீனமாகச் செயற்படுகின்ற நீதிபதிக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண தமிழ்மக்கள் இந்த நாட்டில் எவ்வாறு வாழ முடியுமென்பதைச் சர்வதேசம் இந்தச் சந்தர்ப்பத்தில் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஏற்ற சூழலைச் சர்வதேசமும், ஐக்கியநாடுகள் சபையும் ஏற்படுத்தித் தர உரிய அழுத்தங்களை வழங்க வேண்டும் என்றார். ○

**தொகுப்பு: தமிழின் தோழன்**



# யாழ் போதனாவில் நடந்தது என்ன?

## நீதிக்காகக் காத்திருக்கும் சிறுமி வைசாலி



**எஸ்.வர்ணன்**

**எதிர்காலக்** கனவுகள் பல சுமந்து துள்ளித் திருந்த வைசாலியின் இடது கை மணிக்கட்டு அகற்றப்பட்டமை அவளின் எதிர்காலக் கனவுகளைக் கலைந்து தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காய் நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மல்லாகப் பகுதியை வாசிப்பிடமாகக் கொண்ட சிறுமி இரு பிள்ளைகளில் மூத்தவள் யாழ் முன்னனி ஆரம்பப் பாடவை சாலையில் கல்வி கற்கிறாள்.

துடிப்புள்ள சிறுமியான வைசாலிக்கு கடந்த இரண்டாம் திகதி அவளது வாழ்க்கையில் கறைபடிந்த நாள்.

சிறுமி வைசாலிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நடந்தது என்ன? தவறு யார் பக்கம் நீதியான விசாரணை இடம்பெறும்? என்ற கேள்விகளுக்கு மத்தியில் பெற்றோர் வழங்கிய வாக்குமூலம் மற்றும் அறியக்கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்த கட்டுரை எழுதப்படுகிறது.

### ஆரம்ப சிகிச்சைக்காக சிறுமி அனுமதிப்பு

வைசாலிக்கு காய்ச்சல் ஏற்பட்டதன் காரணமாக வண்ணை மேற்கு வைத்தியசாலையில் (கெங்காதரன் வைத்தியசாலையில்) கடந்த 23.08.2023 அன்று வைத்திய ஆலோசனைக்காக குழந்தை நலமருத்துவ நிபுணர் சரவணபவானந்தனிடம் வைசாலி சென்றாள்.

காய்ச்சல் குறையாமையினால் மறுநாள் 24.08.2023 அன்றும் வண்ணை (கெங்காதரன் வைத்தியசாலை) இல் வைத்திய ஆலோசனைக்காக சிறுமி சென்றாள்.

அங்கு வழங்கப்பட்ட ஆலோசனையின்படி நொதேன் தனியார் வைத்தியசாலையில் கடந்த 24.08.2023 திகதி அன்று குழந்தைநல வைத்திய நிபுணர் சரவணபவானந்தன் அவர்களின் சிகிச்சைக்கா விடுதியில் அனுமதிக்கப்பட்டாள்.

### வைத்திய நிபுணரின் ஆலோசனைப்படி சிறுமி மாற்றப்படுகிறாள்

24.08.2023 மற்றும் 25.08.2023 ஆகிய இரு நாட்களும் அங்கு தங்கி சிகிச்சை பெற்ற பின்னர் நோய்நிலையின் தன்மை அதிகரித்தமையாலும் கூடுதல் பராமரிப்புக்காகவும் குழந்தைநல வைத்திய நிபுணர் சரவணபவானந்தன் அவர்களின் ஆலோசனையின் பேரில் கடந்த 25.08.2023 ஆம் திகதியன்று இரவு நொதேன் தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலையின் குழந்தைநல வைத்திய நிபுணர் சரவணபவானந்தன் 12ஆம் இலக்க விடுதியில் சிறுமி வைசாலி அனுமதிக்கப்பட்டாள்.

தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிறுமி மாற்றப்பட்டமை குழந்தைவைத்திய நிபுணர் சரவணபவானந்தனின் ஆலோசனையின் பேரிலேயே மாற்றப்பட்டதாக பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

### நொதேன் வைத்தியசாலையில் போடப்பட்ட கனுலா

நொதேன் வைத்தியசாலையில் கையில் ஊசி ஏற்ற (Canula) வைசாலியின் வலது கையில் மணிக்கட்டின் வெளிப்புறத்தில் இடப்பட்டு குறித்த பகுதி ஊடாக மருந்து ஏற்றப்பட்டிருந்தது.




**தாதியர்களின் அலட்சியத்தாலும் கவனக்குறைவாலும் குறித்த கையின் நிலை குறித்து உடனடியாக வைத்தியரின் கவனத்துக்கு கொண்டு செல்லவில்லை என்பது குறித்த விடுதியில் அன்று பணியாற்றிய தாதியர்கள் மீது முன்வைக்கப்படும் பாரிய குற்றச்சாட்டு**

பின்னர் யாழ் போதனா வைத்தியசாலை 12ஆம் விடுதியில் வைத்து வெள்ளிக்கிழமை இரவு போடப்பட்ட கன்சஉலஆ ஊடாகவே மருந்து ஏற்றப்பட்டது.

### புதிய கனுலா மாற்றம்

26.08.2023 ஆம் திகதி சனிக்கிழமை காலை அவருக்கு இடது கையின் மணிக்கட்டில் 12 இலக்க விடுதி தாவியரால் புதிய கனுலா பொருத்தப்பட்டது.

மூடியை திறந்து மருந்து ஏற்ற முயற்சித்த ஒவ்வொரு வேளையிலும் இரத்தம் பாய்ந்து நிலத்தில் சிதறியது.

### இரத்தம் வெளியேறியதை அவதானித்த தாயர்

பிள்ளைக்கு ஊசி ஏற்றப்பட்ட பகுதி ஊடாக இரத்தம் வருவதை அவதானித்த தாயார் கடமையில் இருந்த வைத்தியரிடம் (HO) விடம் கூறிய போது அது வழமை என விளக்கம் அளிக்கப்பட்டது.

சனிக்கிழமை காலையிலிருந்து (Saline ) இல் மருந்து கலக்கப்பட்டு குறித்த இடது கையில் போடப்பட்ட இச்ணதடூச் வழியாக ஏற்றப்பட்டு வந்தது.

### தாதியர்கள் முறையற்ற செயற்பாடு.

மறுநாள் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை எமது மகள் உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இரவு 12.00 மணிக்குச் செலுத்தப்பட வேண்டிய

Clindamycin என்ற மருந்தினை குறித்த 12 ஆம் விடுதியைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவர் இரவு 11.45 மணிக்கு (Saline) உடன் கலக்காது ஊசி மூலம் (Canula) இனுள் நேரடியாக செலுத்தியதாக பெற்றோர் குற்றச்சாட்டுகின்றனர்.

தாதியரின் முறையற்ற செயற்பாட்டால் தமது மகள் விழித்து எழுந்து வலியால் துடித்த நிலையில் அங்கு கடமையிலிருந்த

தாதிய உத்தியோகத்தர் ஒருவரிடம் இது குறித்து தெரிவித்த நிலையில் மருந்தின் தன்மையால் அப்படித்தான் என தாதி கூறிவிட்டாராம்.

### saline ஏற முடியவில்லை கனுலா அகற்றம்

இரு தாதிய உத்தியோகத்தர்களும் இணைந்து தனியே Saline மட்டும் Canula ஊடாக ஏற்ற முயற்சித்த போதும் வெறும் Saline இனைக் கூட அந்தக்கையில் போடப்பட்ட Canula ஊடாக ஏற்ற முடியவில்லை.

இதனையடுத்து 28.08.2023 ஆம் திகதியன்று அதிகாலை 4.00 மணியளவில் வைத்திய

அதிகாரியும் தாதிய உத்தியோகத்தர்களும் வந்து பார்வையிட்டு குறித்த இடதுகையில் போடப்பட்ட Canula அகற்றப்பட்டது.

### சிறுமி கை நீலமாகியது கையில் நாடித்துடிப்பும் நின்றது.

10.00 மணியளவில் குழந்தை நல வைத்திய நிபுணர் சரவணபவானந்தன் பார்வையிட்டபோது குளிர்ந்து நீலம் பாரித்து இருந்த கையினைபார் வையிட்டுச் சென்றார்.

இதனையடுத்து மீள வருகை தந்த சரவணபவானந்தன் குழந்தையின் அருகாமையிலிருந்தே உடனடியாக தொலைபேசியூடாக கதைத்ததையடுத்து வைத்திய நிபுணர் மதிவாணன் நேரடியாக வந்து கையினை பரிசோதித்து கையில் நாடித்துடிப்பு இல்லை கையில் இரத்த ஒட்டத்தில் ஒட்சிசன் இல்லை என்பதையும் பரிசோதனைகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்டது.

### தொடர்ச்சியான மூன்று சத்திரசிகிச்சைகள்

சத்திரசிகிச்சை மூலம் கையில் அழுத்தத்தைக் குறைப்பதற்காக இழையத்தை வெட்டிச் செய்யப்படும் சத்திரசிகிச்சை இரத்தக் கட்டியை கரைக்கும் சத்திர சிகிச்சை

செய்யப்பட்டது.

### சிறுமி அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றம்

மூன்று சத்திரசிகிச்சையின் பின்னர் சிறுமி அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டாள் அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை 29.08.2023 ஆம் திகத மதியம் மீளவும் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எடுக்கப்பட்டு இரத்தக்கட்டியைக் கரைப்பதற்கான சத்திரசிகிச்சை செய்யப்பட்டு தொடர்ந்தும்Heparin ஏற்றப்பட்டது.



தொடர்ந்தும் அடுத்து வந்த இரு நாட்களுக்கு அதாவது 30.08.2023 மற்றும் 31.08.2023அதாவது புதனும் வியாழனும் மருந்து ஏற்றப்பட்டு வந்த நிலையில் கை பழைய நிலைக்கு திரும்பவில்லை.

### கை கறுப்பாக மாறியதுடன் குளிர் நிலைக்குச் சென்றது

கையில் கறுப்பு நிறம் அதிகரித்துக் கொண்டு சென்றதோடு தொடர்ந்தும் குளிர்ந்த நிலையில் காணப்பட்டது.

01.09.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கு வருகை தந்த

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரால் மேலதிக கிருமித்தொற்று நிலையையும் உயிராபத்தையும் தடுக்க சிறுமியின் இடது கை மணிக்கட்டுக்குக் கீழான பகுதி அகற்றப்பட வேண்டும் என தாயிடம் கூறப்பட்டது.

### மணிக்கட்டின் கீழ் பகுதி அகற்றம்

மறுநாள் 02.09.2023 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில்சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு எமது மகள் எடுக்கப்பட்டு இடது கை மணிக்கட்டின் கீழான பகுதிமுற்றாக அகற்றப்பட்ட நிலையில் சிறுமி வைசாலி அதிதீவிர சிசிக்சைப் பிரிவில் தங்க வைக்கப்பட்டார்.

### எழும் சந்தேகங்கள் சிக்கப் போவது எத்தனை பேர்.

Cannula வைத்தியரால் போடப்பட்டிருக்கவில்லை. தாதிய உத்தியோகத்தராலேயே குறித்த Cannula போடப்பட்டது.

அவ்வாறு தாதிய உத்தியோகத்தரால் போடப்பட்ட குறித்த Cannula சரியான முறையில் போடப்பட்டிருக்கவில்லை.

மருந்து உரிய முறையில் உட்செலுத்தப்படவில்லை. Saline உடன் கலந்து ஏற்றப்பட வேண்டிய மருந்து Cannula ஊடாக நேரடியாக உட்செலுத்தப்பட்டது.

மருந்து அவ்வாறு நேரடியாக உட்செலுத்தப்பட்டதும் ஏற்பட்ட வலி மற்றும் தாக்கங்கள் குறித்து உடனடியாக தாயாரால் தாதிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

தாதியர்களின் அலட்சியத்தாலும் கவனக் குறைவாலும் குறித்த கையின் நிலை குறித்து உடனடியாக வைத்தியரின் கவனத்துக்கு கொண்டு செல்லவில்லை என்பது குறித்த விடுதியில் அன்று பணியாற்றிய தாதியர்கள் மீது முன்வைக்கப்படும் பாரிய குற்றச்சாட்டு.

இது இவ்வாறிருக்க 12 ஆம் விடுதியில் சம்பவம் நடைபெற்ற போது உத்தியோகபூர்வமாக கடமையில் இருந்த House Officer, Senior House Officer குறித்த விடுதிக்கு பொறுப்பான குழந்தை வைத்திய சிகிச்சை நிபுணர் சரவணபவானந்தன், வைத்திய சாலை பணிப்பாளர் என அனைவர் மீதும் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ள நிலையில் குறித்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

(தொடரும்)...



# நீதிபதிக்கே கிடைக்காத நீதி?



நிலாந்தன்

**கடந்த** வாரம் திலீபன்.இந்த வாரம் ஒரு நீதிபதி.முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிரான சரத் வீரசேகரவின் கருத்துக்கள் வெற்றிடத்தில் இருந்து வரவில்லை. அவை ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்றுகள் என்றும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.அவை ஒரு கூட்டு உளவியலின் வெளிப்பாடுகள். கடந்த பல தசாப்தங்களாக சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் எனப்படுவது வெறுப்பு பேச்சுக்களைக் கக்கும் ஓரிடமாகத்தான் காணப்படுகிறது.இனப்படுகொலை தொடர்பான ஐநாவின் நிபுணத்துவக் கூற்று ஒன்று உண்டு. யூத இனப்படுகொலை எனப்படுவது காஸ் சேம்பர்களில் இருந்து-நச்சு வாயுக் கொலைக்கூடங்களில் இருந்து தொடங்கவில்லை. வெறுப்புப் பேச்சுகளில் இருந்துதான் தொடங்கியது என்று.

இலங்கை நாடாளுமன்றம் கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்பு பேச்சுக்களை அச்சமின்றிக் கூறும் ஓரிடமாகக் காணப்படுகின்றது. நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்ட மற்றும் நீக்கப்படாத வெறுப்புப் பேச்சுக்களைத் தொகுத்தாலே போதும், இனப்பிரச்சினையின் ஊற்றுக்களை இனப்படுகொலையின் ஊற்றுக்களைத் தெளிவாகக் காணலாம்.சரத் வீரசேகர ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினராக முல்லைத்தீவு நீதிபதியை அவமதிக்கவில்லை.அவர் ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலைத்தான் பிரதிபலித்தார். ஒரு நாடாளுமன்றத்தின் அபகீர்த்திமிக்க ஒரு பாரம்பரியத்தின் ஆகப்பிந்திய வாரிசு அவர்.

> எதிரான போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.தாயகம், புலம்பெயர் சமூகம், தமிழகம் ஆகிய மூன்று தரப்புகளும் ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை உக்கிரமாக முன்வைக்க வேண்டும். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி செல்வதற்கான வழி வரைபடம் ஒன்று தமிழ் கட்சிகளிடமும் செயற்பாட்டாளர்களிடமும் இருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தனக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனின் வீட்டை கற்களால் தாக்குமாறு தனது ஆதரவாளர்களை ஏவியதாக குற்றம் சாட்டப்படுகிறது.எந்தப் பிரதம நீதியரசரின் முன் அவர் பதவியேற்றாரோ,அதே பிரதம நீதியரசரின் வீட்டைத் தாக்குமாறு குண்டர்களே ஏவி விட்டார்.ராஜபக்சக்கள் இலங்கைத் தீவின் முதற் பெண் பிரதம நீதியரசரான சிராணி பண்டாரநாயக்காவை நாடாளுமன்றத்தின் மூலம் பதவி நீக்கினார்கள்.தங்கள் சொந்த இனத்தைச் சேர்ந்த பிரதம நீதியரசர்களையே அவமதிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியத்தில், ஒரு மாவட்ட நீதிபதிக்கு இவ்வாறு நடந்தமை புதுமையானது அல்ல.

அதுமட்டுமல்ல இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு.சட்டம், நீதி பரிபாலனக் கட்டமைப்பு போன்றவை சுயாதீனமானவை என்று கூறப்படுவது ஒரு தோற்றமாயைதான். ஜனநாயக இதயம் செழிப்பாக இருக்கும் ஒரு நாட்டில் நீதிபரிபாலனத் துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையே வலு வேறாக்கம் இருக்கக்கூடும். ஆனால் ஜனநாயகத்துக்குப் பதிலாக இனநாயகம் பயிலப்படும் ஒரு நாட்டில்,இனநாயகத்தின் பாதுகாப்பிடமாகக் காணப்படும் ஒரு நாடாளுமன்றம் இனரீதியாக பாரபட்சமுள்ள சட்டங்களைத்தான் நிறைவேற்றும்.அதாவது ஓர் அரசுக் கட்டமைப்பின் அரசுக் கொள்கை எதுவோ அதைத்தான் அவர்கள் சட்டமாக நிறைவேற்றுவார்கள்.அந்த சட்டத்தைத்தான் நீதிபரிபாலானக் கட்டமைப்பு அமுல்படுத்தும். அதாவது சட்டமும் நீதிபரிபாலனக் கட்டமைப்பும் அரசின் உபகரணங்கள்தான்.இதில் சில தனிப்பட்ட நீதிபதிகள் அந்த சிஸ்டத்தின் கைதிகளாக இருக்க மறுக்கும் பொழுது நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

சட்டம் என்பது அதிகாரத்தின் சேவகன்தான். அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது ஆட்சிக் கொள்கையை அமுல்படுத்த சட்டங்களை இயற்றுவார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம்,இப்பொழுது விவாதிக்கப்படும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம்,நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் போன்ற எல்லாமே ஒடுக்கும் அரசுக்கட்டமைப்பின் உபகரணங்களே.இவை மட்டுமல்ல பெருந்தொற்று நோய்க் காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டமானது தமிழ் மக்களின் நினைவு கூரும் உரிமைக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இதுதொடர்பில் அதிகம் பகிரப்படும் ஓர் ஆங்கிலக் கூற்று உண்டு.தென்னாபிரிக்காவின் இனஒதுக்கல் சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது.ஹிட்லர் யூதர்களை இனப்படுகொலை புரிந்தமை சட்டபூர்வமாகத்தான் செய்யப்பட்டது.அடிமை முறைமை சட்டபூர்வமானது. கொலோனியலிசம் அதாவது குடியேற்றவாதம் சட்டபூர்வமானது.எது சட்டபூர்வமானது என்பது நீதியின் பாற்பட்ட ஒரு விவகாரம் அல்ல.அது அதிகாரத்தின் பாற்பட்ட ஒரு விவகாரமே

இலங்கைத்தீவில் நாடாளுமன்றம் இனரீதியிலான அதிகாரத்தைப் பிரதிபலிக்கும் போது இங்கு சட்டமும் அந்த அதிகாரத்தின் சேவகனாகவே காணப்படும்.இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்துத் தான் முல்லைத்தீவு நீதிபதியின் விவகாரத்தைப் பார்க்க வேண்டும்.

இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதியெனப்படுவது ஏற்கனவே கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு விட்டது.2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐநாவின் நிலைமாறுகால நீதிக்கான அல்லது பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம் எனப்படுவது உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. உள்நாட்டு நீதி போதுமாக இருந்தால் எதற்காக நிலைமாறு கால நீதி என்ற அனைத்துலக ஏற்பாட்டைக் குறித்துச் சிந்திக்க வேண்டி வந்தது?

மேலும் அண்மையில் வெளியிடப்பட்ட சனல் நாலு வீடியோவும் உள்நாட்டு நீதி தொடர்பாக ஏற்கனவே உள்ள சந்தேகங்களைப் பலப்படுத்துகின்றது.

கடந்த ஆண்டு ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 56/1 தீர்மானத்தின் அடிப்படையில் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரித்துத் தொகுப்பதற்கான ஒரு கட்டமைப்பு ஐநா மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராக பயன்படுத்தப்படத்தக்கவை.அவை நிச்சயமாக இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதிபரிபாலனக் கட்டமைப்பிடம் வழங்கப்படப் போகும் தகவல்கள் அல்ல.இலங்கைத் தீவின் உள்நாட்டுப் புலனாய்வுக் கட்டமைப்பு மற்றும் நீதிபரிபாலான கட்டமைப்பு என்பவற்றின் மீதான நம்பகத்தன்மையை அந்த அலுவலகம் கேள்விக்கு உள்ளாக்குகின்றது.

இவ்வாறான அனைத்துலகச் சூழலில்தான் முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் நடந்திருக்கிறது. இது பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கைத் தீவின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மேலும் பலப்படுத்தக்கூடியது. தமிழ் மக்கள் ஏன் அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றார்கள் என்பதனை நிரூபிப்பதற்கு ஆகப்பிந்திய சான்று இது.

தென்னிலங்கையில் உள்ள பேராயர் மல்கம் ரஞ்சித், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அனைத்துலக விசாரணை குறித்த தமது கோரிக்கைகளிலிருந்து பின்வாங்கும் ஓர் அரசியல் சூழலில், இந்த விவகாரம் தமிழ் நோக்கு நிலையில் பொருத்தமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்று. பேராயர் மல்கம் ரஞ்சித்,மைத்திரிபால சிறிசேனா போன்றவர்கள் தொடக்கத்தில் அனைத்துலக விசாரணை தேவை என்று கேட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய கோரிக்கை தளம்பத் தொடங்கி விட்டது. சிங்கள பௌத்த கூட்டு உளவியலைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தளம்பத் தொடங்கி விட்டார்கள்.எந்த ஒரு கூட்டு உளவியலின் பிரதிநிதியாக சரத் வீரசேகர பேசுகிறாரோ, அதே கூட்டு உளவியலின் வெவ்வேறு முகங்கள் தான் பேராயரும் முன்னாள் ஜனாதிபதியும்.

எனவே அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கையை தமிழ் மக்கள் பெரும்பாலும் தனியாகத்தான் முன்னெடுக்க வேண்டியிருக்கும்.ஆனால் அதைக்கூட ஒரு கட்சியாக முன்னெடுப்பதற்குப் பதிலாக பல கட்சிகளாக முன்னெடுப்பதே பலம்.

கடந்த கிழமை திலீபன்,இந்தக் கிழமை ஒரு நீதிபதி.என்றவாறாக தமிழ் மக்களின் கவனமும் ஊடகங்களின் கவனமும் புதிய புதிய விடயங்களின் மீது குவிக்கப்படுகின்றது.ஆனால் அவை வெவ்வேறு விடயங்கள் அல்ல.ஒரே ஒடுக்கும் கட்டமைப்பின் வெவ்வேறு வெளிப்பாடுகளே அவை.அவற்றை அவற்றுக்கேயான ஒட்டுமொத்த வரைபடத்துக்குள் வைத்து தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஒடுக்குமுறைக்கு ஒரு நீண்ட கால வழி வரைபடமும் மாறாத நிகழ்ச்சி நிரலும் ஒன்றிணைந்த செயல்பாடும் உண்டு.

எனவே அதற்கு எதிரான போராட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தாயகம், புலம்பெயர் சமூகம், தமிழகம் ஆகிய மூன்று தரப்புகளும் ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை உக்கிரமாக முன்வைக்க வேண்டும். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி செல்வதற்கான வழி வரைபடம் ஒன்று தமிழ் கட்சிகளிடமும் செயற்பாட்டாளர்களிடமும் இருக்க வேண்டும்.

அனைத்துலக விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை ஐநாவுக்கு எழுதும் கடிதங்களில் மட்டும் இருந்தால் போதாது.அல்லது ஐநாவின் பக்க நிகழ்வுகளில் அல்லது ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளில் இருந்தால் மட்டும் போதாது.அல்லது ஊடகங்களுக்கு வழங்கப்படும் நேர்காணல்களில் இருந்தால் மட்டும் போதாது.அல்லது தேர்தல் கால விஞ்ஞாபனங்களில் இருந்தால் மட்டும் போதாது.அதற்குமப்பால்,அதைவிட ஆழமான பொருளில், அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அனைத்துலக விசாரணையைக் கோருவது அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றங்களை நோக்கி விவகாரத்தை எடுத்துச் செல்வது போன்றன அறநெறியின் பாற்பட்ட அல்லது நீதிநெறியின் பாற்பட்ட கோரிக்கைகள் அல்ல.அவை முழுக்க முழுக்க வெளியுறவுச் செயற்பாடுகள்.பலம் வாய்ந்த நாடுகள் அப்படி ஓர் அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.ஏனென்றால் இந்த பூமியிலே தூய நீதி என்று எதுவும் கிடையாது.அரசியல் நீதிதான் உண்டு.நிலைமாறுகால நீதியோ அல்லது பரிகார நீதியோ எதுவானாலும்,அரசியல் நீதி என்பது நாடுகளுக்கு இடையிலான அரசியல்,பொருளாதார,படைத்துறை நலன்களின் அடிப்படையில் எடுக்கப்படுவதுதான்.



# விடுதலைப் புலிப் போராளிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல

## சிங்கள நூல் வெளியீட்டில் தீபச்செல்வன்

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல என்று தெரிவித்துள்ள தீபச்செல்வன், தலைவர் பிரபாகரன் அதனை தீர்க்கமாக எடுத்துரைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டத்தில் இடம்பெற்ற பதுங்குகுழியில் பிறந்த குழந்தை நூலின் சிங்கள மொழியாக்க நூல் வெளியீட்டில் தீபச்செல்வன் ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவாவது:

### இரண்டு இனங்களுக்கு இடையிலான உரசல்:

இந்த உரையை உங்கள் முகங்களைப் பார்த்து உங்கள் மொழியில் பேசமுடியாத நிலையையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். ஏனென்றால் சிங்கள மொழியென்பது, எங்கள் சிறுபராயத்திலே போரின் மொழியாக, எங்கள்மீதான ஒடுக்குமுறையின் மொழியாகத்தான் எம் செவிகளுக்கு வந்தது என்பது இந்த தீவினுடைய துரதிஷ்டமான உண்மை. சிங்கள மொழியில் கேட்கின்ற சொற்கள் எங்களுக்கு அச்சமூட்டுவதாக எங்கள் உயிர்களை பறிப்பதாக இருந்தது என்பதுதான் நாங்கள் கடந்து வந்த வரலாறு, உண்மையில் அந்த நிலையையிட்டு மிகவும் வேதனைப்படுகிறேன். என்னுடைய மொழியில் பேசுகின்ற



பொழுது நிச்சமாக உங்கள் செவிகளுக்கு அது புரியாத இந்த நிலை, எனக்கு அதிருப்தி தருவதாக துயரம் தருவதாக இருந்தாலும் இலங்கைத்தீவில் இரண்டு இனங்களுக்கும் இரண்டு மொழிகளுக்கும் இடையில் இருக்கும் உரசலின் உண்மை நிலை இது என்பதுதான் துதிஷ்டமான துயரம் தருகின்ற நிலைமை. இருந்தாலும்கூட இந்த நிலை மாறி வருகின்ற ஒரு வெளிப்படாக இந்த நூலினுடைய வெளிப்பாடு அமைந்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

என்னுடைய முதல் நாவல் நடுகல். அது சிங்களத்தில் மொழியாக்கப்பட்ட போது அதற்கு சிங்கள சமூகம் மிகப் பெரிய வரவேற்பை அளித்தது. கல்வியியலாளர்கள், படைப்பாளிகள், சாதாரண சிங்கள இளைஞர்கள், மக்கள் என்று மிகப் பெரிய வரவேற்பை எனக்கு அளித்தனர். உண்மையில் மிக ஆச்சரியமாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கும் போராளிகளுக்கும் எதிரான சில தமிழர்கள்கூட, என்னுடைய நாவல் மீது சேறடிப்புக்களையும் அவதூறுகளையும் வீசிய போதும்கூட என்னுடைய நாவல் குறித்து ஒரு எதிர்ச்சொல்லைக்கூட நான் சிங்கள சமூகத்திடம் இருந்து கேட்கவில்லை. எனவே சிங்கள சமூகத்திடமும் சிங்கள மொழியிலும் ஒரு மாற்றம் உருவாகி வருவதை எங்கள் இனம்மீது எங்கள் மக்கள்மீது ஒரு அணைப்பு ஏற்பட்டு வருவதை நான் உணர்கின்றேன். அந்த அடிப்படையில்தான் இந்த கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வும் அரங்கேறி இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

### சிங்களப் படைப்பாளிகளை கொண்டாடிய புலிகள்

இந்த வெளியீட்டில் பெருந்திரளான மக்கள்



அமர்ந்திருப்பதும்கூட எனக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருகின்ற விடயமாகும். இந்த இடத்தில் சிங்கள மக்களின் இதயங்களைப் பார்த்து அவர்களின் அன்பைப் பார்த்து நான் மிகவும் ஆசுவாசப்படுகிறேன். மிகவும் மகிழச்சி அடைகிறேன். இந்த இடத்தில் இன்னொரு முக்கிய விடயத்தையும் பதிவு செய்ய விரும்புகிறேன். 2001ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலத்தில் சமாதானச் சூழல் இலங்கையில் ஏற்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு இலக்கிய மாநாடு ஒன்றை மானுடத்தின் ஒன்றுகூடல் என்ற தலைப்பில் நடத்தியிருந்தது. அதில் பெருமளவான சிங்கள முற்போக்குப் படைப்பாளிகள் கலந்துகொண்டிருந்தார்கள்.

உண்மையில் சிங்களப் படைப்பாளிகளை தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் பெரியளவில் கொண்டாடினார்கள், மதித்தார்கள் என்ற விடயத்தை இந்த இடத்தில் பதிவு செய்கிறேன். கவிஞர் மஞ்சுள வெடிவர்த்தன. ஊடகவியலாளர் பாஷண அபேவர்த்தன போன்ற படைப்பாளிகள் அன்று எங்களுடைய மண்ணில் நடந்த இலக்கிய மாநாட்டில் கலந்துகொண்டு மானுடத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்த நிகழ்வை இந்த இடத்தில் நினைவுகூர்கிறேன். பின்வந்த காலத்தில் எங்களுக்காக குரல் கொடுத்தமைக்காக அவர்கள் இந்த நாட்டில் உயிர் அச்சுறுத்தலால் புலம்பெயர்ந்த நிலையையும் நினைவுபடுத்துகிறேன்.

### ஒவ்வொரு வீட்டில் இருந்தும் விதைத்துள்ளோம்:

எங்களுடைய போராளிகள் என்பவர்கள், எங்களுக்குப் பிறிதானவர்களல்ல. என்னுடைய வீட்டில் எனது சகோதரன் ஒரு விடுதலைப் புலிப் போராளி. எங்கள் வீடுகள் தோறும் ஒவ்வொரு போராளிகள் இருந்தார்கள். அவர்கள் எங்களுடைய மக்களின் விடுதலைக்காக எங்களுடைய தேசத்திற்காக தங்களுடைய இளம்வயதில் தங்களுடைய வாழ்க்கை, தங்கள் நலன்கள், கனவுகளைத் துறந்து, போராடச் சென்றார்கள். நாங்கள் எங்கள் வீடுகளில் இருந்து ஒவ்வொருவரையும் எங்கள் மண்ணில் விதைத்திருக்கின்றோம். நான் எங்கள் போராளிகளைப் பற்றி பேசுவது தயவு செய்து நீங்கள் எங்கள் போராளிகள் மீது தவறான எண்ணம் கொள்ளக் கூடாது.

ஏனென்றால் எங்கள் போராளிகள் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் சிங்கள மக்களுக்கு ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. நாங்கள் சிங்கள மக்களின் அபிலாசைகளுக்கு எதிரானவர்களல்ல. நாங்கள் சிங்கள மக்களை ஏற்றுக்கொள்ளுகிறோம். சிங்கள மக்களின் அபிலாசைகளை ஏற்றுக்கொள்ளுகிறோம். சிங்களப் பேரினவாத அரசுக்குத்தான் நாங்கள் எதிரானவர்கள். அதற்கு எதிரானதுதான் எங்கள் போராட்டம் என்பதை எங்களுடைய போராளிகள், எங்களுடைய தலைவர் பிரபாகரன் அழுத்தமாக பதிவு செய்திருக்கிறா'ர. அந்த அடிப்படையில்தான் எங்கள் மண்ணில் அந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது.

### சிங்களப் படைப்பாளிகளின் இதயத்தில் எங்கள் விடுதலை

இப்போதும் நாங்கள் நிராயுதமாக்கப்பட்டவர்களாக, காவல் இழந்தவர்களாக, அச்சுறுத்தப்பட்டவர்களாக, சுதந்திரமற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த இடத்தில் பெருமளவான சிங்கள படைப்பாளிகள் வருகை தந்து என்னுடைய நூல் தொடர்பாகவும் இலங்கையின் நிலவரம் தொடர்பாகவும் பேசக்கூடிய நிலமை இங்கே இருக்கிறது. ஆனால் வடக்கு கிழக்கில் ஒரு தமிழ் படைப்பாளியின் நூல் வெளியீட்டு விழாவில் இவ்வளவு சிங்களப் படைப்பாளிகள்கூட கலந்துகொண்டு பேசமுடியாத அடக்குமுறை சூழல்



அங்கே இருக்கிறது. நாங்கள் இப்போதும் ஒன்றை தெளிவாக நம்புகிறோம். மஞ்சுள வெடிவர்த்தன போன்ற சிங்கள சமூகத்தின் மனசாட்சிக் கவிஞர் போல பாசண பேவர்த்தன போன்ற சிங்கள சமூகத்தின் மனசாட்சி ஊடகவியலாளர் போன்றவர்கள் மீண்டும் எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். எங்களுடைய மக்களுக்காக வடக்கு கிழக்கினுடைய அமைதிக்காக வடக்கு கிழக்கின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும். உண்மையில் எங்கள் மக்களின் விடுதலையும் எங்கள் நிலத்தின் அமைதியும் சிங்களப் படைப்பாளிகளின் இருதயத்தில்தான் தங்கியிருக்கிறது என்று திடமாக நம்புகிறேன்.

தொடர்ந்தும் இந்த தீவில் இனமேலாதிக்கமும் இன முரண்பாடும் நீடிக்குமாக இருந்தால் இலங்கை மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் பொருளாதாரச் சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க நேரிடும். சந்திராயன் என்கின்ற விண்கலத்தை இந்தியா நிலவுக்கு அனுப்பியிருந்தது. அந்த விண்கலம் நிலவில் கால் பதித்த தருணத்தில் வடக்கில் தமிழர்களின் தொண்மையான பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான போட்டியும் முரண்பாடும் நிகழ்ந்தது. அங்கு தமிழர்கள் ஒரு பொங்கல் வழிபாட்டை செய்ய முடியாத அடக்குமுறை நிகழ்ந்தது. இந்தியா நிலவில் கால் பதிக்கும் சமயத்தில் இலங்கையில் - வடக்கு கிழக்கில் நில ஆக்கிரமிப்புக்காக கால் பதிக்கின்ற நிகழ்வு இடம்பெறுகின்றது. வரலாறு முழுவதும் தமிழர்களை ஒடுக்குவதிலும் அழிப்பதிலும்தான் இலங்கை அரசு தன்னுடைய பொருளாதாரத்தையும் தன்னுடைய அறிவுப்புலத்தையும் செலவிட்டு வந்துள்ளது. அந்த அறிவுப் புலத்தை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் அறிவியல்களுக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் இலங்கை அரசு பயன்படுத்தியிருந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்திராமல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பேராளுமை மிக்க இயக்கத்தின் கோரிக்கையான அரசியல் தீர்வினை முன்வைத்து அந்த இயக்கத்தை அணைத்துச் சென்றிருந்தால் இலங்கை அரசாங்கம் நிலவில் கால் பதித்திருக்க முடியும்.

### இலங்கையில் இரண்டு தேசங்கள் மலர்ந்தால்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்த விடயத்தை தீர்க்கமாக ஒருமுறை பேசியிருந்தார். இலங்கைத் தீவில், தமிழர்களின் உரிமை அங்கீகரிக்கப்படுதமாக இருந்தால் இலங்கையில் இரண்டு சம அந்தஸ்துள்ள தேசங்கள் மலருமாக இருந்தால் இலங்கையும் தமிழர் தேசமும் வல்லமை கொண்ட தேசமாக இந்த உலகத்தில் மிளிரும் என்று அவர் கூறியிருந்ததும் அந்த அடிப்படையில்தான்.

அன்புக்குரிய நண்பர்களே! போர் எங்கள் கனவுகளைத் திருகியிருந்தது. போர் தொடர்பான ஞாபகங்களை மறக்க முடியாது. அதனுடைய வடுக்களாகத்தான் எங்கள் இலக்கியங்கள் உருவாகியிருக்கின்றன. நாங்கள் பெயருக்காகவும் புகழுக்காகவும் அங்கீகாரத்திற்காகவும் படைப்புக்களை எழுதத் துவங்கவில்லை. எங்கள் இருப்புக்காகவும் அடையாளத்திற்காகவும் விடுதலைக்காகவுமே எங்களுடைய படைப்புக்களை எழுதி வருகின்றோம். அந்த அடிப்படையிலே முதன் முதலிலே மிக நெருக்கமான என்னுடைய கவிதைகள், சிங்கள இதயங்களோடு என்னுடைய கவிதைகள் பேசத் தொடங்கும் இந்தத் தருணம், மிக நெகிழ்ச்சியும் மகிழ்வும் ஆறுதலும் தருகிறது. இந்தப் பயணம் தொடர வேண்டும். மேலும் பல ஈழத் தமிழ் படைப்பாளிகளினுடைய படைப்புக்கள் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக உரையாடல்கள் நிகழ வேண்டும். இலங்கைத் தீவில் அமைதியும் சமாதானமும் தமிழர்களுக்கான விடியலும் ஏற்பட வேண்டும் என்று வேண்டி விடைபெறுகிறேன் என்று கவிஞர் தீபச்செல்வன் மேலும் குறிப்பிட்டார்.





# நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல்! கொடூரமான இனவெறிக்கு உதாரணம்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கண்டனம்

நீதிபதிகளின் உயிருக்கும் ஆபத்து உள்ளது என்பதுடன், இலங்கை ஜனாதிபதியின் ‘‘நல்லிணக்கம்’’ என்ற பேச்சு மனித நேயத்தை அவமதிக்கும் செயலாகும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நீதிபதி சரவணராஜாவின் நீதித்துறை தார்மீக தைரியத்திற்கு தலைவணங்கும் அதேநேரத்தில் பொறுப்புக்கூறலுக்கு அழைப்பு விடுப்பதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நீதிபதி பதவி விலகியமை தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், செப்டம்பர் 23, 2013 அன்று, நீதிபதி டி.சரவணராஜா முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி, நியாயாதிபதி பதவி, குடும்ப நீதிமன்ற நீதிபதி பதவி, முதன்மை நீதிமன்ற நீதிபதி பதவி, சிறிய உரிமை கோரல் நீதிமன்ற நீதிபதி பதவி, மற்றும் சிறார் நீதிமன்ற நீதிபதி பதவி ஆகிய பதவிகளிலிருந்து பதவிவிலகல் செய்துள்ளார்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அவர் அனுப்பிய கடிதத்தில், அவர் பதவிவிலகல் செய்ததற்கு, ‘எனது உயிருக்கு அச்சுறுத்தல்’ மற்றும் ‘அதிக மன அழுத்தம்’ காரணமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தூர்மலை விகாரை விவகாரம் தொடர்பாக அவர் வழங்கிய தீர்ப்பின் காரணமாகவே நீதிபதி சரவணராஜா உயிருக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதி, தொல்லியல் துறை அதிகாரிகள் முன்னைய நீதிமன்ற உத்தரவை மீறி நீதிமன்றத்தை அவமதித்தார்கள் என்றும், இந்துக்களின் இடத்தில், ஜூலை 14, 2022க்குப் பிறகு கட்டப்பட்ட தூபி உட்பட அனைத்து புதிய கட்டுமானங்களையும் அகற்ற வேண்டும் என்றும் அவர் ஒரு தீர்ப்பை வழங்கினார்.

தொல்பொருள் கண்டுபிடிப்பு என்ற பொய்யான சாக்குப்போக்கின் கீழ், சிங்கள இனக்குழுவை உள்ளடக்கிய இலங்கை அரசு, பல ஆண்டுகளாக, தற்போதும் கூட, இந்து கோவில்களை முழுமையாக அழித்து, புத்த கோவில்களாக மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

14 ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட, தமிழ் வரலாற்றுப் பகுதிகளில் பல பௌத்த விகாரைகள் அண்மையில் கட்டப்பட்டுள்ளன அல்லது இந்த தமிழர்




பகுதிகளில் அடக்குமுறை மிக்க பெருமளவிலான இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் தீவிர ஆதரவுடன் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு வரும் தமிழ் பிரதேசங்களில் பௌத்தர்கள் யாரும் வசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிபதி சரவணராஜா தனது தீர்ப்பின் பின்னர், தனக்கு கொலை மிரட்டல்கள் மற்றும் கடுமையான அழுத்தங்கள் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சரத் வீரசேகர மற்றும் பேரினவாத சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் அச்சுறுத்தல்களுக்கு ஆளானதாக நீதிபதி சரவணராஜா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை விகாரையின் தீர்ப்பு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தனது தனிப்பட்ட பெயரைப் பயன்படுத்தி தமக்கு எதிராக இரண்டு சட்ட நடவடிக்கைகள் தாக்கல் செய்



யப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் அவரைப் பின்தொடர்ந்ததாகவும், செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு தீர்மானத்தை மாற்றுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் நீதிபதி சரவணராஜா மேலும் தெரிவித்தார்.

இந்த உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாக, தான் மிகவும் நேசித்த அனைத்து நீதித்துறை பதவிகளில் இருந்தும் பதவிவிலகல் செய்வதாகக் குறிப்பிட்டு தனது அறிக்கையை முடித்தார்.

மேற்கூறிய சம்பவம் - ஒரு மூத்த தமிழ் நீதிபதி தனது பல நீதித்துறை பதவிகளில் இருந்து விலக்குமளவுக்கு அச்சுறுத்தப்பட்டது.

இலங்கையில் தமிழர்களுக்கு உள்நாட்டு பரிகாரம் இல்லை என்பது மட்டுமல்லாமல் தமிழ் நீதிபதிகளின் உயிருக்கும் ஆபத்து உள்ளது என்பதை தெளிவாக காட்டுகிறது . இந்த நிலையில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ‘‘நல்லிணக்கம்’’ என்ற பேச்சு மனித நேயத்தை அவமதிக்கும் செயலாகும்.

இலங்கையின் கடந்த கால ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் தமிழ் மக்கள் பெற்றிருக்கக்கூடிய சிறந்த நபர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே என சில சர்வதேச சக்திகள் கூறுகின்றன. ராஜபக்ச மற்றும் சிங்கள தீவிரவாதிகளால் இழுக்கப்படும் ஒரு பொம்மை ஜனாதிபதி விக்ரமசிங்க என்பது நிதர்சனமான உண்மை.

இந்த சமீபத்திய சம்பவம் ஜனாதிபதி விக்ரமசிங்கவின் இயலாமையை தெளிவாககாட்டுகிறது. துரதிர்ஷ்டவசமாக, எந்தக் குற்றமும் செய்யாமல், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டியதற்காகத் தன்உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் ஒரு தமிழனின் இந்தச் சம்பவம் அதிர்ச்சியளிக்கக்கூடிய ஒன்றல்ல, இது இலங்கைத் தீவில் நிலவும் கொடூரமான இனவெறிக்கு மிகச் சமீபத்திய உதாரணம் மட்டுமே.

இலங்கைத் தீவில் தமிழர்கள் மீதான துன்புறுத்தல் மற்றும் இனப்படுகொலையின் வரலாற்றுச்சூழலைக் கருத்தில் கொண்டால், மனிதஉரிமைகள் பேரவையின் சர்வதேச குற்றங்கள் - இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் - இறுதிக்கட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்டஉள் விசாரணை என்பன ஒரு கொடூரமான நகைச்சுவை மட்டுமல்ல, மனித உரிமைகள்பேரவையின் நேர்மையையும் கேள்விக்கு உட்படுத்துகிறது.

இலங்கையில் உள்ளநீதித்துறையின் தமிழ் உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் செய்வதற்கு பாதுகாப்பற்றவர்களாக இருந்தால், பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் சுதந்திரமாகப் பேசவும் பாதுகாப்பாகவும் இருப்பார்கள் என்றுமனித உரிமைகள் பேரவை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது

# யாழ் சித்த மருத்துவ விரிவுரையாளருக்கு இந்தியாவில் கிடைத்த பதக்கம்

இலங்கை - யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளராக கடைமையாற்றும் டாக்டர் நித்தியப்பிரியா சிவராம் (BSMS, MD(S) பரீட்சையில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்திற்கு தகுதி பெற்றுள்ளதாக பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்பட்டுளளது.

2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். M.G.R மருத்துவ பல்கலைக்கழகத்தினால் குழந்தை மருத்துவத்றையில், நடாத்தப்பட்ட பட்டமேற்படிப்பு ((MD)பரீட்சையில் முதலிடம் பெற்று தங்க பதக்கத்திற்கு தகுதி பெற்றுள்ளதாக அந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண சித்த மருத்துவ விரிவுரையாளருக்கு இந்தியாவில் கிடைத்த பதக்கம் Tamil Nadu Dr M G R Medical University இவர் தமிழ்நாடு டாக்டர். M.G.R மருத்துவ பல்கலைக்கழகத்தில் 2020 ஆம் ஆண்டிலிந்து 2022 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் 3 ஆண்டுகளிலும் நடைபெற்ற MD பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் அதிகூடிய புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற தகுதி பெற்றுள்ளார்.

இதுவரை காலத்திலும் சித்தமருத்துவத்தில் குழந்தை மருத்துவத்றையில் இலங்கையையிலிருந்து சென்று பட்டமேற்படிப்பை முடித்து வந்த இரண்டாவது மருத்துவர் என்பதும், வரலாற்றில் இலங்கையையிலிருந்து சென்று தங்க பதக்கத்தை பெற்ற முதல் மருத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இளநிலை பட்டப்படிப்பிலும் இறுதியாண்டில் முதல் தரத்தில் சித்தியெய்து முதலிடம் பெற்று பல்கலைக்கழகத்தின் சிறப்பு விருதுகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களுக்கெதிரான தீர்ப்பிற்கு வரப்பிரசாதம்

## சபையில் போட்டுடைத்த சிறீதரன்

இலங்கையினுடைய நீதித்துறை ஊழல் நிறைந்தாக மாறியுள்ளதெனவும், தமிழர்களுக்கெதிரான தீர்ப்பிற்கு வரப்பிரசாதம் வழங்கப்படுவதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

(3) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய நீதிபதி ரி. சரவணராஜா இந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கு காரணமாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட்ட பேரனிவாதிகளுடைய நடவடிக்கைகளுக்கு இந்த அரசாங்கம் இதுவரை சரியான பாதையை திறந்து விடவில்லை.

இலங்கை ஒரு நீதியானதுறையாக இல்லை என்பதை தான் இந்தச் சம்பவங்கள் காட்டி நிற்கின்றன எனவும் இலங்கையினுடைய நீதித்துறை மரணித்து விட்டது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தமிழர்களுக்கு தீர்வு இல்லை என்பதை அம்பலப்படுத்திய ரணில்!



சிறிலங்காவின் பேரினவாத சிங்களத் தலைவர்கள் மத்தியில் மிதவாத தலைவராகவும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டவராகவும் கடந்த காலங்களில் அறியப்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் உண்மைமுகம் படிப்படியாக வெளிவர ஆரம்பித்துள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வை மாத்திரமல்லாமல், இறுதிக் கட்டப் போரின் போது இழைக்கப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்களுக்கு நீதியான விசாரணையையும் உறுதிசெய்வார் என இதுவரை காலமும் தமிழ் மக்கள் நம்பியிருந்த நிலையில், அதனை பொய்யாக்கும் வகையில் ஜேர்மனிய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தனது சிங்கள பேரினவாத முகத்தை ரணில் விக்ரமசிங்க வெளிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு மாத்திரமல்ல, எந்தவொரு விடயங்களுக்கும் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள தாம் இடமளிக்கப் போவதில்லை என ரணில் விக்ரமசிங்க திட்டவட்டமாக தெரிவித்துள்ளமை நீதிக்காக போராடும் தமிழ் மக்களுக்கு பேரிடியான செய்தியாக அமைந்துள்ளது.

இந்த கருத்து மூலம் இறுதிக் கட்டப் போரின் போது இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளிலும் சர்வதேசத்தை அனுமதிக்கப் போவதில்லை என்ற கருத்தை ரணில் விக்ரமசிங்க மறைமுகமாக தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்கை வலியுறுத்தும் வகையில் கொண்டுவரப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு கடந்த காலங்களில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணையை வழங்கியிருந்தது.

எனினும் சர்வதேச விசாரணைகளை அனுமதிக்கப் போவதில்லை என தற்போது கூறியுள்ளதன் மூலம், கடந்த காலங்களில் ஐ.நா தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கியதன் பின்னணியில் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கும் உண்மையான நோக்கம் இருந்ததா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஆழ்மனதில் சர்வதேச விசாரணைக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க, சர்வதேச நெருக்கடிகளை தவிர்க்கும் வகையில் சர்வதேச விசாரணைக்கு ஆதரவான ஒருவர் என்ற போலி நிலைப்பாட்டை வெளிப்படுத்தியமை தற்போதைய அவரின் சர்வதேச விசாரணை தொடர்பான கருத்து மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மேற்குலக ஆதரவு கொண்ட ஒருவராக அறியப்பட்ட ரணில் விக்ரமசிங்க, ஜேர்மனியின் அரச ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் மேற்குலக நாடுகளையும் கடுமையாக சாடியுள்ளார்.

# ஆயுதங்களை கைவிட்டதற்காக இன்று கவலைப்படுகின்றோம்

## மட்டக்களப்பில் கொந்தளித்த செல்வம்



தென்னிலங்கைக்கு சிம்மசொப்பனமாக ஆயுதப்போராட்டத்தினை முன்னெடுத்த நாங்கள் ஆயுதங்களை கைவிட்டதற்காக இன்று கவலைப்படுகின்றோம் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்த கருணாகரம் அவர்களின் 60வது பிறந்த தினமான மணி விழாவினை முன்னிட்டு ஜனாவின் வாக்குமூலம் நூல் வெளியீட்டு நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் 'எங்கும் புத்தபிக்குகளின் நாட்டாமைத்தனத்தையும் இராணுவமும் முப்படையம் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் அடாவடித்தனத்தையும் மாற்றவேண்டுமானால் மீண்டும் ஆயுதப்போராட்டத்தினை ஆரம்பித்தால் என்ன?' என்ற விருப்பம் ஏற்கின்றது எனவும் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு தேவாநாயகம் மண்டபத்தில் இந்த நிகழ்வு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கிழக்கு மாகாண ஆளுனருக்கு ஜனாவின் வாக்குமூலம் 'நூல் வழங்கப்பட்டு நூல் வெளியீடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்த கருணாகரம் மற்றும் அவரது துணைவியார் இணைந்து இந்த நூல் வெளியீட்டை ஆரம்பித்துவைத்தனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமிழீழ விடுதலை கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகசபை, சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# மேய்ச்சல் தரை போராட்டக்காரர்கள் ஜனாதிபதியுடன் சந்திக்க ஏற்பாடு



மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற் தரை விவகாரம் தொடர்பில் பண்ணையாளர்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பினை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவரும், ரணில் 2024 செயலணித் தலைவருமாகிய கணபதிப்பிள்ளை மோகனின் ஏற்பாட்டில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8ம் திகதி ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்தை ஒட்டியதாக மையிலத்தமடு பண்ணையாளர் சங்க தலைவர் சீ.தியாகராசா, செயலாளர் பா.பரசுராமன், மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தரணி பேராசியர் த. ஜெயசிங்கம் அடங்கிய குழுவினர் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மோகன் தெரிவித்துள்ளார்.

# மிரட்டியது யார்?

## அனுரா கேள்வி



முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் விசாரணை நடத்தப்பட்டு, அதன் பின்புலம் கண்டறியப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டே முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாகவுமே கூறப்படுகின்றது.

நீதிபதி கூறியது உண்மையெனில் நாடு எந்தக் கட்டத்தில் உள்ளது? தமக்கு சாதகமான தீர்ப்பு வரவில்லை என்பதற்காக நீதிபதிக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் நாட்டில் சட்டத்தின் ஆட்சி எப்படி நடைபெறும்? என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

எனவே, மேற்படி சம்பவம் தொடர்பில் உண்மையை கண்டறியும் வெளிப்படைதன்மையுடனான விசாரணை அவசியம் என்றும்,

உண்மையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா, ஆம் எனில் அது யாரால் விடுக்கப்பட்டது? இல்லையெனில் அதன் பின்னணியில் உள்ள சூழ்ச்சி என்ன? என்பது கண்டறியப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# தீவகத்தில் அழிக்கப்படும் இயற்கை வளங்கள்



யாழ் தீவகப் பகுதிகளில் உள்ள பனைமரம் உற்பட பயன்தரும் மரங்கள் தொடர்ச்சியாக எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டு வரும் நிலையில் பொறப்பு வாய்ந்த அதிகாரிகள் அசண்ட ஈனமாக செயல்படுவதாக தீவக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

யாழ் தீவகப் பகுதியான வேலனைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மண்கும்பான் அல்லப்பிட்டி போன்ற பகுதிகளிலே இவ்வாறு பயன் தரும் மரங்கள் எரியூட்டப்பட்டு அழிக்கப்படுகின்றன.

குறித்த பகுதிகளில் காணப்படும் பிரதான பளமான பனை வளம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதோடு வீதிகளில் நாட்டப்பட்ட நிழல் தரும் மரங்களும் இவ்வாறு அளிக்கப்படுகிறது.

அது மட்டும் அல்லாது வயல் நிலங்களில் காணப்படும் பற்கள் இரவு நேரங்களில் விசாமிகளால் தீயிடப்படுவதால் குறித்த பகுதி முழுவதும் தீப் பரம்பல் ஏற்படுகிறது.

மாலை நேரங்களில் இத் தகைய செயல்பாடுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் நிலையில் பிரதேசத்தில் சேவையில் ஈடுபடும் பொறப்பு வாய்ந்த அதிகாரிகள் தடுப்பதற்கு உரிய பொறிமுறையை ஏற்படுத்தவில்லை என குற்றச்சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை தெரிவித்த போதும் விசமிகள் எரியூட்டுகின்றனர் என கூறி அதிகாரிகள் தப்பித்துக் கொள்ளும் செயல்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது தீயணைப்பதற்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும் என்பதற்காக அவ் வீதியால் வருகை தரும் அரச அதிகாரிகள் தீ ஏற்பட்டால் கூட அசந்தமாக செல்லும் நிலை தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறார்.

இதுவரை சுமார் நான்கு தடவைகளுக்கு மேல் எரியூட்டப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்ற நிலையில் மக்களின் வரிப்பணம் மூலம் பெறப்பட்ட நிதியிலை தீயணைப்பு பிரிவுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் பனை வளம் மற்றும் பயன் தரும் மரங்கள வகைதொகை இன்றி அளிக்கப்படும் ஆனால் தீவகத்தின் எஞ்சிய வயல் பிரதேசங்களும் முழுமையாக உவர் நிலமாகும்.

ஆகவே தீவகப் பகுதிகளிடம் இயற்கை வளங்களை அழிப்போருக்கு எதிராக பொறப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# குறைந்தபட்ச நீதியைக்கூட பெறமுடியாத நிலையில் தமிழர்கள்



தமிழ் மக்கள் குறைந்தபட்ச நீதியைக்கூட பெறுமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற இடம்பெற்ற ஊடகவியலாளர் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய செய்கைகளுக்கான திகதிகள் குறிக்கப்பட்டு கால்நடைகளை மேய்ச்சல் தரைக்கு கொண்டு செல்லவேண்டிய சூழ்நிலையேற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மயிலத்தமடு, மாதவனைக்கு கால்நடைகளை கொண்டு செல்வதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படவில்லை என்றும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் ஒருவரை நியமிப்பது குறித்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# லண்டனில் மார்பில் சுடப்பட்ட இலங்கைத் தமிழ்ச் சிறுமி தன்னை சுட்டவர்களிடம் கூற விரும்பும் விடயம்



சிறுவயதில் துப்பாக்கியால் சுடப்பட்டு சக்கர நாற்காலியில் வாழும்

நிலைக்கு ஆளான இலங்கைத் தமிழ் இளம்பெண் ஒருவர், தன்னை சுட்டவர்களுக்கு கூற, தன்னிடம் ஒரு விடயம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மார்பில் சுடப்பட்ட தமிழ்ச் சிறுமி

தென்மேற்கு லண்டனில் அமைந்துள்ள, தன் உறவினரின் மளிகைக்கடையில் விளையாடிக்கொண்டிருந்த துஷா கமலேஸ்வரன் என்னும் அந்த ஐந்து வயது இலங்கைத் தமிழ்ச் சிறுமிக்கு, அன்று தன் வாழ்வே மாறப் போகிறது என்பது தெரியாது.

அந்த கடைக்குள் நுழைந்த போதைக் கும்பலைச் சேர்ந்த மூன்று பேர், தங்கள் எதிராளி ஒருவரை துப்பாக்கியால் சுட, அந்த நபர் தப்பிக் கொள்ள, துப்பாக்கிக் குண்டு விளையாடிக்கொண்டிருந்த துஷாவின் மார்பைத் துளைத்துக்கொண்டு சென்று அவளது முதுகெலும்பைத் தாக்கியது.

இரத்த வெள்ளத்தில் சாய்ந்த துஷா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவளது முதுகெலும்பில் குண்டு தாக்கியதால், அவளால் நடக்கமுடியாது என்னும் துயரச் செய்தியை அவளது பெற்றோரான சசி மற்றும் ஷர்மிளா தம்பதியருக்குத் தெரிவித்தார்கள் மருத்துவர்கள்.

இது நடந்தது, 2011ஆம் ஆண்டு. 2012ஆம் ஆண்டு துஷாவை சுட்ட Nathaniel Grant, Anthony McCalla மற்றும் Kazeem Kolawole ஆகிய மூவரும் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

**தன்னை சுட்டவர்களிடம் துஷா கூற விரும்பும் விடயம்**

தற்போது 18 வயதாகிறது துஷாவுக்கு. நடனத்தில் விருப்பம் கொண்ட துஷாவின் நடனக் கனவுகளை அந்த போதைக் கும்பல் கலைத்துவிட்டதால், அவளால் இனி நடனமாட முடியாது. துஷாவின் இன்னொரு விருப்பம், மருத்துவராவது. தன்னைக் காப்பாற்றிய மருத்துவர்களைப் போல, தானும் ஒரு மருத்துவராக விரும்புகிறார் துஷா.

தன்னை சுட்டவர்களை சந்தித்து அவர்களிடம் சில விடயங்களைக் கூறவேண்டும் என விரும்புகிறார் துஷா. அவர்களுடைய கண்களை நேருக்கு நேராக பார்க்கவேண்டும், சிறையிலிருந்தபோது அவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள், தாங்கள் செய்த குற்றத்தின் விளைவுகளை அவர்கள் புரிந்துகொண்டார்களா என்பதை தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்கிறார் அவர். சில விடயங்களுக்காக அவர்களை நான் மன்னிக்கிறேன், ஆனால், சில விடயங்களுக்காக அவர்களை என்னால் மன்னிக்கமுடியாது என்கிறார் துஷா. அவர்கள் என் பிள்ளைப்பிராயத்தின் சில பகுதிகளைத் திருடிவிட்டார்கள்.

அவர்கள், நான் என்ன சாதித்துள்ளேன் என்பதைப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறேன் என்று கூறும் துஷா, நான் கேம்பிரிட்ஜ் பல்கலையில் மருத்துவம் படிக்கிறேன், நான் என் வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டிருக்கிறேன், அவர்கள் என்ன செய்கிறார்கள் என நான் பார்க்க விரும்புகிறேன் என்கிறார்.

ஒரு மருத்துவராகி, எனக்குக் கிடைத்த அக்கறையை, கவனிப்பை, என்னைப் போல் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு, நான் கொடுப்பேன், அதுதான் என் கனவு என்கிறார் துஷா!

## நீதிபதி சரவணராஜா விவகாரம் சி.ஐ.டி.யிடம் ஒப்படைப்பு

நீதவான், குடும்ப நீதிமன்ற நீதிபதி, முதன்மை நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட பல்வேறு நீதித்துறைப் பொறுப்புகளில் இருந்து விலகுவதாகத் தெரிவித்திருந்தார்.

அவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதே அவரது பதவி விலகலுக்கு காரணம் என நீதிபதி குறிப்பிட்டார்.

முன்னதாக, நீதவான் சரவணராஜாவின் திடீர் பதவி விலகல் தொடர்பில் உடனடி விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சர் சி.ஐ.டிக்கு விசாரணையை ஒப்படைத்துள்ளார்.

## தமிழர் தாயகத்தில் தீவிரமடையும் போராட்டங்கள்

செலுத்துவதை வலியுறுத்தியும் தமிழர் தாயகத்தில் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

தமிழர் தாயகத்தில் சட்டத்தரணிகள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அதேவேளை,கடந்த புதன் கிழமை தமிழ் தேசிய பரப்பில் இயங்கிவரும் ஏழு கட்சிகள் இணைந்து மனித சங்கிலி போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.ஆனால்,இந்த போராட்டம் எந்தளவுக்கு வெற்றியளித்தது அல்லது இந்த போராட்டத்தின் ஊடாக சிங்கள தேசம் எந்தளவுக்கு அடிபணிந்து என்பது கேள்விக்குறியே.

தமிழர்களுடைய கடந்த கால வீர வரலாறு,போராட்ட வரலாறுகள் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்கள் சற்று கவனம் செலுத்துவது அவசியம். தமிழர்களுடைய போராட்டங்கள் என்பது சிங்கள தேசத்தையும் சர்வதேசத்தையும் ஆட்டம் காணவைக்கும் போராட்டங்களாக அமைவதே தமிழரின் கடந்த கால வரலாற்றை நிரூபிப்பதாக இருக்கும்.அதைவிடுத்து தந்திரோபாயமில்லாத, இராஜதந்திரமில்லாத முடிவுகள் தமிழருக்கு எந்த நீதியையும் பெற்றுத்தராது.

ஒரு மூடிய அறைக்குள் இருந்து கொண்டு கத்துக்குட்டிகள் போன்று முடிவுகளை எடுப்பதை தவிர்த்து,சர்வதேச அரங்குகளில் நடக்கின்ற போராட்டங்களை கவனத்தில் எடுத்து தென்னிலங்கையை அசைக்கும் வகையிலான தீர்மானங்களை எடுப்பதே காலத்தின் தேவை.அந்த அடிப்படையில்,பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் தங்களால் முடிந்தவரை எதிர்ப்புகளை வெளியிடும் அதேவேளை,கொழும்பில் சட்டத்தரணிகளை திரட்டி ஒரு போராட்டத்தை நடத்துவது பிரயோசனமாக இருக்கும்.

குறிப்பாக இந்த போராட்டத்தில் மனித உரிமை அமைப்புகள், மாணவர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளிலே அக்கறை கொண்டு ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிற அமைப்புகள், மத ஸ்தாபனங்கள் உட்பட சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் ஒன்றிணைத்து மாபெரும் சக்தியாக திரள்வதே பொருத்தமாக இருக்கும்.

தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமான வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தினால் மீறப்பட்டு வரும் அதேவேளை,தமிழரின் நிலங்கள்,அடையாளங்கள் -பண்பாடுகள் தொடர்ந்தும் சூறையாடப்பட்டு வருகின்றன. இந்நிலையில்,தமிழர்களை அடக்கி-ஒடுக்கி தமிழரின் வாழ்விடங்களை அபகரிக்கும் சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு தடையாக இருக்கும் தமிழ் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தி-அவர்களை மௌனிகளாக்கும் செயற்பாட்டிலும் சிங்கள இனவாதிகள் இறங்கியிருக்கிறார்கள்.இந்நிலையில் இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்தும் அனுமதித்தால் தமிழர்களின் இருப்புக்கும் தமிழர்களின் அபிலாஷைகளுக்கும் ஆபத்தாக முடிந்துவிடும். ஆகவே,இனியும் தமிழர்கள் மௌனிகளாக -பொறுமையாக இருப்பார்களேயானால் மிகப்பெரும் ஆபத்துகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எனவே,நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் என்பது தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகும்; -தமிழ் மக்களுடைய தேசத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகும்; சிங்கள பேரினவாதிகள் முன்னெடுக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு தமிழர்கள் தடையாக இருக்கக்கூடாது என்ற ஒரு அழுத்தமான செய்தி வழங்கப்பட்டிருக்கிறது.ஆகவே சிங்கள பேரினவாதத்தின் ஆபத்து தொடர்பில் தமிழ் தேசிய பரப்பில் இயங்குவோர் சிந்திப்பது அவசியம் என்பதுடன்,எங்களுடைய போராட்ட வடிவங்களை மாற்ற வேண்டும். அவ்வாறானதொரு போராட்ட எழுச்சியே தமிழரின் தலைவிதியை மாற்றும்.

## நீதிபதி விவகாரம்; முழுமையான கரிசனை...

தலைமையிலான நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.தவபாலன் ஆகியோருக்கும், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று காலை நடைபெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பின்போது, முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக செயற்பட்ட ரி.சரவணராஜா, நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அவ்வாறு அவர் வெளியேறுவதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர்ச்சியான அழுத்தம் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக பிரதம நீதியரசரின் கவனத்துக்கு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினர் கொண்டுவந்திருந்தனர்.

அத்துடன், குறித்த விடயம் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பேசுபொருளாகியுள்ளதோடு நாட்டின் நீதித்துறையின் மீதும் மிகப் பாரிய கரும்புள்ளி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மீதான விசனம் ஒட்டுமொத்தமாக நீதித்துறையை அகௌரவத்துக்கு உள்ளாக்குவதோடு, அச்சுறுத்தும் நிலைமையும் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே, இவ்விதமான நிலைமைகள் தொடராது முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமாக இருந்தால், ரி.சரவணராஜாவின் வெளியேற்றம் சம்பந்தமாக உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்த வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் எடுத்துரைத்தனர். இதனையடுத்து, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, குறித்த விடயத்தில் முழுமையான கரிசனை கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதிபடத் தெரிவித்தார்.

இதனையடுத்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்னவின் கையொப்பத்துடன் நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு ஏற்படுத்தப்பட்ட உயிரச்சுறுத்தலுக்கு காரணமானவர்களை தாமதமின்றி கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும், அவருக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பிலும் உண்மையான நிலைமைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை கோரியும் இரு வேறு கோரிக்கை கடிதங்கள் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரட்ன மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி விடயங்களை இலங்கை சட்டத்தரணிகளின் சங்கத் தலைவர் கௌசல்ய நவரட்ன வீரகேசரிக்கு உறுதிப்படுத்தியதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தின் தெளிவுபடுத்தல்களுக்காக காத்திருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

## சனல் 4 ஊடகத்தினை ஏன் புனிதமாக கருதுகின்றீர்கள்?

சனல் 4 ஊடகத்தினை ஏன் புனிதமாக கருதுகின்றீர்கள் என இலங்கை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க சீற்றத்துடன் ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

டிடபில்யூநியுஸ் உடனான பேட்டியின் போது ஜனாதிபதி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்தஞாயிறுதாக்குதலில் ஈடுபட்டவர்களிற்கும் அரசாங்க உறுப்பினர்களிற்கும் தொடர்புள்ளதாக சனல் 4 வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து செவ்விகாண்பவர் கேள்வி எழுப்பியவேளையே ரணில் விக்கிரமசிங்க சீற்றமடைந்தார்.

நீங்கள் ஏன் சனல் 4 புனிதமானது என கருதுகின்றீர்கள் ஏன் அதனை புனிதமாக கருதுகின்றீர்கள் என ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

அதற்கு செய்தியாளர் நான் அவ்வாறு செயற்படவில்லை என தெரிவித்ததை தொடர்ந்து பிரிட்டனில் பலர் அது குறித்து கருத்து தெரிவித்துள்ளனர் ஏன் நீங்கள் சனல் 4னை மாத்திரம் கருத்தில் கொள்கின்றீர்கள் என கேள்வி எழுப்பினார்.

அதற்கு செய்தியாளர்உறுதியான வலுவான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என தெரிவித்தமைக்கு ஊடகங்கள் குற்றச்சாட்டுகளை தெரிவிக்கின்றன என்பதற்காக நான் எதனையும் செய்ய முடியாது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சட்டமா அதிபர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்-சிஐடியின் முன்னாள் அதிகாரி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார் ஏன் அது பற்றி கேள்வி எழுப்பகூடாது என ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபை கேள்வி எழுப்புகின்றது உங்களுடன் பணிபுரிந்த முன்னாள் ஜனாதிபதி கேள்வி எழுப்புகின்றார் என்ற குற்றச்சாட்டிற்கு நீங்கள் அதனை முதலில் என்னிடம் கேட்கவில்லை. நான் கேள்வி எழுப்பிய பின்னரே கேட்கின்றீர்கள். நீங்கள் சனல் 4 அறிக்கை முற்றிலும் உண்மையான விடயம் என்பது போல என்னிடம் கேள்வி எழுப்பினீர்கள் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் 3000 க்கும் மேற்பட்ட...

கிளிநொச்சி மாவட்டத்தில் 3000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி , கண்டாவளை , பச்சிலைப்பள்ளி , பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்நிலைமை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலையேற்றம் , தொழில் வாய்ப்பின்மை , வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறு சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 568க்கும் மேற்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும், 2,675க்கும் மேற்பட்ட 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுமே போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 1,288 சிறுவர்களும் , கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 768 சிறுவர்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 393 சிறுவர்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நீதிபதியின் பதவி விலகல் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பில் பாரதூரமான கேள்விகளை எழுப்பியுள்ளது

## சர்வதேச இணையம் விசனம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி.சரவணராஜாவின் பதவி விலகல் மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறியமை இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பில் பாரதூரமான கேள்விகளை எழுப்புவதாக சட்டம் மற்றும் நீதி தொடர்பான சர்வதேச இணையத்தளமான ஒதஹூடிண்ஞ என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

நீதிபதியின் பதவி விலகல் கடிதம் கடந்த வியாழன் அன்று ஒன்லைனில் பரப்பப்பட்டதாக ஒதஹூடிண்ஞ இணையதளம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொலை அச்சுறுத்தல்கள் மற்றும் தனது தொழில் வாழ்க்கை மீதான அதிக அழுத்தங்கள் காரணமாக தாம் வகிக்கும் அனைத்து நீதித்துறை பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்வதாக நீதிச்சேவை ஆணைக் குழுவிற்கு வழங்கிய பதவி விலகல் கடிதத்தில் நீதிபதி குறிப்பிட்டுள்ளதாக இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

குருந்தூர்மலை வழக்கு தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவை மாற்றுமாறு கடந்த மாதம் 21ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தம்மை அலுவலகத்திற்கு வரவழைத்து அழுத்தம் கொடுத்ததாக டி.சரவணராஜா குற்றஞ்சாட்டியதாக ஒதஹூடிண்ஞ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது

மேலும், பாதுகாப்பு தொடர்பிலான முன்னாள் அமைச்சர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து தனக்கு உயிருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளதாக அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பைக் குறைக்கும் வகையில் அதிகாரிகள் செயற்பட்டதாகவும், புலனாய்வுப் பிரிவினர் தம்மை தொடர்ந்து கண்காணிப்பில் வைத்துள்ளதாகவும் நீதிபதி டி.சரவணராஜா குற்றம் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் அவர் பதவி விலலுடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக ஒதஹூடிண்ஞ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# கிழக்குப் பல்கலைக்கழகம் பொதுமக்கள் பார்வைக்காக திறப்பு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகம் 2023 ஒக்டோபர் மாதம் தனது 42ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. இதனடிப்படையில் 2023 ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் ஒக்டோபர் 8ஆம் திகதிவரை பல்கலைக்கழக வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரத்தை சிறப்பிக்கும் வகையில் இப்பிராந்தியத்தில் உள்ள பொதுமக்களுக்காக ஒக்டோபர் 3ஆம் திகதி Open Day - திறந்த தினம் எனும் பெயரில் ஒரு தினத்தை நடாத்த பல்கலைக்கழக சமூகம் முடிவு செய்துள்ளது. இந்நிகழ்வு இப்பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகம் அப்பிராந்திய வளர்ச்சிக்கான ஒரு இயந்திரமாக செயல்படுகிறது. திறந்த தினம் என்பது பொதுமக்கள் பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பார்க்கவும், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அமர்வுகளில் பங்கேற்கவும் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பரந்த அளவிலான கல்வித் திட்டங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெறவும் வாய்ப்பை ஏற்படுத்தவுள்ளது.

இச்சிறப்பு நிகழ்விற்கு பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள் மற்றும் சிறுதொழில்துறையினர் சார்ந்த சமூகத்தை பல்கலைக்கழகத்திற்கு வருகை தருமாறு பல்கலைக்கழக நிருவாகம் அழைப்பு விடுக்கின்றது. இத்தினத்தில் பங்குபற்றுவோருக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக பெறுமதியான விளக்கவுரைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை, அறிவியல் சோதனைகள் தொடர்பான நடைமுறை விளக்கங்கள் மற்றும் செயல் விளக்கங்கள், கல்விச் சூழலின் கண்ணோட்டம், நூலக வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவூட்டல், பல்கலைக்கழக மாணவர் அனுமதி நடைமுறை குறித்த வழிகாட்டுதல், பல்கலைக்கழக வாழ்க்கை மற்றும் கல்வி வாழ்க்கையின் வேறு அம்சங்கள் போன்ற விடயதானங்களில் விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இச்சிறப்பு நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பிற சமூகங்களின் பங்கேற்பை பல்கலைக்கழக சமூகம் வரவேற்கின்றது. இதனூடாக பொதுமக்கள் பல்கலைக்கழக நடைமுறை தொடர்பான அவர்களது வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# திருமலை இலுப்பைக்குள விகாரை அமைப்பு அரச சர்வாதிகாரம் என்கிறார் சபா குகதாஸ்

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்கள் முழுமையாக வாழும் இடத்தில் மக்களின் எதிர்ப்பின் மத்தியில் அமைக்கப்படும் விகாரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இன விரோத செயற்பாட்டின் தொடர்ச்சியாக அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.



அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்,கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பத்தில் இந்த விகாரை அமைப்பு இன முரண்பாடுகளை உருவாக்க கூடும் என்பதால் அதனை தடுத்தார்.

ஆனால் பின்னர் அவரை மீறி சட்டவிரோதமாக இரவோடு இரவாக விகாரையின் பெயர்ப் பலகை நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கு நியாயம் கேட்டு அகிம்சை வழியில் போராடிய மக்களை நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்று விரட்டியுள்ளனர். அத்துடன் பொலிஸார் ஊடகவியலாளர்களை அனுமதிக்காது தடுத்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு சென்று இன நல்லிணக்கம் பற்றி பேசும் ரணில் அரசாங்கம் உள்நாட்டில் அதற்கு எதிரான இன முரண்பாடுகளை அரச இயந்திரத்தின் உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட மேய்ச்சல் தரை நிலங்களை அபகரித்தல், குருந்தூர் மலை விவகாரம், திருமலை இலுப்பைக்குள விகாரை அமைப்பு என நீண்ட பட்டியல் தமிழர்களின் இருப்பை கபளீகரம் செய்ய அரச இயந்திரத்தினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு-கிழக்கில் நீதிமன்றங்களின் சுயாதீனம் அரசதலையீடு காரணமாக கேள்விக்குள்ளான நிலையில் நல்லிணக்கம் என்ற வெற்று வார்த்தை அத்துமீறிய விகாரைகளை அமைப்பதன் மூலம் இனவாத கோர முகம் தமிழ் மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் பெயரளவில் இயங்க தென்னிலங்கை அரச நிர்வாகமும் பௌத்த பிக்குகளும் தாம் நினைத்ததை சட்ட எல்லையை தாண்டி அரங்கேற்றுகின்ற நிலை உருவாகியுள்ளது.

இது தமிழர் பிரதேசங்களில் அரச சர்வாதிகாரமாக மாறியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

### நீதிபதி விவகாரம்;

# ஐ.நாவுக்கு மனு கையளிக்க தீர்மானம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் டி.சரவணராஜாவின் பதவி விலகலுக்கு நீதியைக்கோரி, நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த போராட்டம் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெசுக்கு அனுப்பி வைப்பதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்சிடம் கையளிக்கப்படவுள்ள 'இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு'வாசிக்கப்பட்டது.

குறித்த மனுவில்,இலங்கை தீவில் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இன ரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிர்வாகத் துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத்தீவில் தமிழ்த்தேசிய இனம் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிர்வாகத்துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது.

நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் அரசு விரும்பிய தீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில்,

தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடுசெய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை 06.10.2023 அன்று அகரவ் பப்ளிசிங் & மீடியா பிறின்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.